ஓம்

# இந்துசாதனம்

SUPPLEMENT TO THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

புத்தகம்—சஅ } யாழ்ப்பாணம:— தாதுஸு ஆவணிமீ ௩௨ (1936 ஆகஸ்ட் 20) வியாழக்கிழமை { இலக்கம்—௬எ

## தமிழா! புருஷார்த்தங்கள் கை கூடுக

### தேசிய கவி சுப்பிரமணியபாரதியார் எழுதியது

### "பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக; நீ எப்பொழுதும் இன்பம் எய்துக"

தமிழா, தெய்வத்தை நம்பு. பயப்படாதே. உனக்கு நல்ல காலம் வருகின்றது.

உனது ஜாதியிலே உயர்ந்த அறிஞர்கள் பிறந்திருக்கிறார்கள். தெய்வங்கண்ட கவிகள், அற்புதமான ஸங்கித வித்வான்கள், கை தேர்ந்த சிற்பர், பல நூல் வல்லார், பல மணிகள் தோன்றுகிறார்கள். அச்சமில்லாத தர்மிஷ்டர் பெருகுகின்றனர். உனது ஜாதியிலே தேவர்கள் மனிதராக அவதரிக்கிறார்கள். கண்ணை நன்றாகத் துடைத்துவிட்டு நான்கு பக்கங்களிலும் பார். ஒரு நிலைக்கண்ணாடியிலே போய்ப் பார்.

நமது நாட்டு ஸ்திரிகளிலே பல சக்தி கணங்களின் அவதாரமாக ஜனித்திருக்கிறார்கள். ஒளி, சக்தி, வலிமை, வீர்யம், கவிதை, அழகு மகிழ்ச்சி, நலங்களெல்லாம உன்னைச் சார்கின்றன.

(1) தமிழா, பயப்படாதே. ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்.

2. ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே. ஜாதி இரண்டொழிய வேறில்லை என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக் கொள்

3. பெண்ணை அடிமை என்று கருதாதே. முற்காலத்துத் தமிழர் மனைவியை "வாழ்க்கைத்துணை" என்றார். ஆத்மாவும் சக்தியும் ஒன்று. ஆணும் பெண்ணும் சமம்.

4. வேதங்களை நம்பு. அவற்றின் பொருள் தெரிந்துகொண்டபின் நம்பு புராணங்களைக்கேட்டுப் பயனடைந்து கொள். புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள்போல் நடந்துகொள்ளாதே.

5 தமிழா, உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிதமிஞ்சி விட்டன. உனது மதக் கொள்கைகள், லௌகீகக் கொள்கைகள், வைதிகநடை, லௌகிகநடை எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலை தூக்கி ஆட இடங் கொடுத்து விட்டாய் இவற்றை நீக்கிவிடு. வீட்டிலும் வெளியிலும் தனிமையிலும் கூட்டத்திலும், எதிரிலும் எப்போதும் நேர்மை யிருக்கவேண்டும்; உண்மையிருக்க வேண்டும் நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது, பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது. பிறர் பிறரை வஞ்சிப்பதையும் நீ இயன்றவரை தடுக்க வேண்டும். எல்லாப் பேறுகளைக் காட்டிலும் உண்மைப் பேறுதான் பெருமை கொண்டது. உண்மை தவங்களுக் கெல்லாம் உயிர். உண்மை சாத்திரங்களுக்கு எல்லாம் வேர். உண்மை இன்பத்திற்கு நல்லுறுதி. உண்மை பரமாத்மாவின் கண்ணாடி, ஆதலால் தமிழா எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்.

6. தமிழா, எழுதிப் படிப்பதெல்லாம் மெய்யுமில்லை, எதிர் நின்று கேட்பதெல்லாம் பொய்யுமில்லை "முந்திய சாத்திரந்தான் மெய், பிந்திய சாஸ்திரம் பொய்" என்று தீர்மானம் செய்துகொள்ளாதே. காலத்துக்கும் உண்மைக்கும் எதிரிடையாக ஓர் கணக்கு ஏற்பட்டிருக்கிறது "தகப்பன் வெட்டிய கிணறு என்று சொல்லி மூடர்கள் உப்பு நீரைக் குடிக்கிறார்கள்' என்று பஞ்சதந்திரம் நகைக்கிறது.

7. இவ்வுலகில் நான்கு புருஷார்த்தங்கள் என்று பெரியோர்கள் காட்டியிருக்கிறார்கள், அவை: அறம் பொருள் இன்பம் வீடு என்பன.

௧. இவற்றுள் அறமாவது கடமை. அது உனக்கும் உனது சுற்றத்தாருக்கும்பிறர்க்கும் நீ செலுத்த வேண்டிய கடமை.

"பிறர் என்பதனுள் வையகம் முழுதும் அடங்கும். கடமையில் தவறலாகாது. தொழில்களெல்லாம் நற்பயன் தருமிடத்து அறங்களாகும்.

௨. பொருள் என்பது செல்வம் நிலமும் பொன்னும் கலையும் புகழும் நிறைந்திருத்தல் நல்ல மக்களைப் பெறுதல் இனப்பெருமை சேருதல் இவையெல்லாம் செல்வம். இச் செல்வத்தைச் சேர்தல் மனித உயிருக்கு ஈசன் இட்டிருக்கும் இரண்டாம் கட்டளை.

௩. இன்பம் என்பது இனிய பொருள்களுடன் உயிர் கலந்து நிற்பது. பெண — பாட்டு — கூத்து முதலிய ரஸ வஸ்துக்களை அனுபவிப்பது இவ் வின்பங்கள் எல்லாம் தமிழா உனக்கு நன்றாக அமையும்படி பராசக்தி அருள் புரிக. உன்னுடைய நோய்களெல்லாம் தீர்க உனது வறுமை தொலைக. உனக்கு இனிமையும் அழகுமுடைய வஸ்துக்களெல்லாம் வசப்படுக. பஞ்ச பூதங்களும் உனக்கு வசப்படுக. நீ எப்பொழுதும் இன்பம் எய்துக.

௪. வீடாவது பரமாத்மாவுடன் அறிவு கலந்து நிற்பது. 'வீடு என்ற சொல்லுக்கு 'விடுதலை' என்பது பொருள். மேற் கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களும் ஈடேறிய பெரியாருக்கு ஈசன் தானாகவே வீட்டு நிலையருள் செய்வான். தமிழா உனக்குப் புருஷார்த்தங்கள் கை கூடுக.

திருவாரூர்—திருத்தாண்டகம்

புலன்களைந்தா லாட்டுண்டு போது போக்கிப் புறம்புறமே திரியாதே போது நெஞ்சே!, சலங்கொள்சடை முடியுடைய தலைவா வென்றுந் தக்கன்செய் பெரு வேள்வி தகர்த்தா யென்றும், இலங்கை மன்னன் சிரநெரித்த விறைவா வென்று மெழிலாரூ ரிடங்கொண்ட வேந்தா யென்றும், நலங்கொளடி யென்றலைமேல் வைத்தாயென்றும் நாடோறு நவின்றேத்தாய் நன்மையாமே.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

## அகில இந்திய மாணவர் மகாநாடு

### மாணவர்களுக்கு ஜவஹரின் புத்திமதி

லக்ஷ்மணபுரி ஆக 12—

அகில இந்திய மாணவர் மகாநாடு இன்று பிற்பகல் ஜனாப் எம். ஏ. ஜின்னாவின் தலைமையில் கூடியது. பண்டித ஜவஹர்லால்நேரு மகாநாட்டை ஆரம்பித்து வைத்தபின் கவிதாகூர், மகாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரி, ஸர். சப்ரூ முதலியவர்களிடமிருந்து வந்த பாராட்டுச் செய்திகள் படிக்கப்பட்டன.

பண்டித ஜவஹர் பிரசங்கம்

பண்டித ஜவஹர்லால்நேரு மகாநாட்டைத் திறந்துவைத்துப் பின்வருமாறு பேசினார்:-

தேசத்தின் முன்னுள்ள அவசரமான பிரச்னைகளைத் தீர்க்க முயலல் நான் எப்போதும் நழுவிவிடுவதாகப் புகார் கூறப்படுகிறது. விசால நோக்கத்துடன் எதையும ஆராய்ந்தாலொழிய நாம் அற்ப விஷயங்களில் கவனத்தைச் செலுத்திப் பெரிய விஷயங்களைக் கவனியாமல் விட்டுவிடக்கூடும்' அன்னிய தேசங்களில்நடக்கும் விஷயங்களில் எனக்கு எப்போதும் ஊக்கமுண்டு. ஏனெனில உலகம் முழுவதிலும் முன்னேற்றச் சக்திக்கும் பிற்போக்கானவற்றிற்கும நடக்கும் போராட்டத்தின் பிரதிபிம்பமே இந்தியாவிலும் தோன்றுவதாக நான் கருதுகிறேன்.

வகுப்புப் பிரச்னை ஒரு வீண் தொல்லை. அதிகாரவர்க்கத்தினரே அடிமைத் தேசங்களில் வகுப்புத் தொல்லையைக் கிளப்பிவிடுகின்றனர்.

இப்போதைய யுவர்களே நாளைக்குத் தேசத்தின் தலைவர்களாவார்கள். அவர்கள் சுயேச்சைப் போராட்டத்தைத் தக்கபடி நடத்துவதற்குத் தங்களைப் பாத்திரர்களாக்கிக் கொள்ளவேண்டும்.

## சைவர்முன் நிற்கும் பணி

திரு. சி. எம். இராமச்சந்திரச்செட்டியார் சொற்பொழிவு

(திருசிராப்பள்ளி சைவசித்தாந்த சபையின பொன்விழாவில் நிகழ்த்தப் பெற்றது)

சைவர்களாகிய நம் முன்னர் நாம் செய்யவேண்டியதாய் நின்ற பணி இன்னது என்று அறிவதன்முன் சைவம் என்பதை நாம் எந்த நோக்கத்தில் கொள்ளவேண்டும் என்பதை அறியவேண்டும். தற்காலத்தில் நம் சைவப் பெரியோர்கள் ஆலயந்தொழுவது, வீடுகளில் பூசைசெய்வது, சபைகளில் சைவத்தைப் பற்றிப் பேசுவது ஆகிய இம்மூன்று பணிகளையே கைக்கொண்டிருக்கிறார்கள். இவைகளில் முதல் இரண்டு பணிகளும தம் நலமாக, அதாவது, தம ஆன்மா ஈடேற்றமடைதற்காக ஏற்பட்டவைகள். மூன்றாவது பணி ஒருவாறு தம் இனத்தார்க்கு நன்மை ஏற்படுவதற்காக ஆகும். இப்பணிகள் மட்டில் நாம் அடங்கி இருந்தால்; நாம் சைவத்திருப்பணியில் முற்பட்டவர்கள் ஆகோம்.

தற்காலத்தில் நமது பெரியோர்கள் சைவத்தைப்பற்றிக் கொண்டிருக்கும் நோக்கங்களைச் சிறிது மாற்றிக்கொள்ளவேண்டும். இன்று காலை இங்கே பேசிய அந்தணப் பெரியார், "சைவம் என்பது சாத்விகமானது; அது பிறரிடம் வலிந்து செல்லாது; அதன் சாத்விகத்தை அறிந்து அதன் பெருமையை உணர்ந்து பிறர் தாமாகவே அதற்கு ஈடுபடுவர்" என்று கூறினர். இந்தக் கொள்கை எத்துணைப் பெருமை உடைத்தாயினும், நமது சமயாசாரியர்கள் நடத்திக் காட்டிய கொள்கை எனக் கூறல் முடியாது. திருஞானசம்பந்தர் முதலான சைவசமயாசாரியர்கள் சைவத்தை முற்பநிசைவமாகக் (ஆக்கிரக சைவம்) கொண்டார்கள். அச் சமயம் தன் பெருமையால் தானே வளரட்டும் என்று சும்மா இருக்கவில்லை. அக்காலத்தில் நாட்டில் ஆழ்ந்துகிடந்த புத்த சமணப் புன்சமயங்களைத் தாக்கி அழித்து மக்களை எல்லாம் சைவசமயத்துக்குத் திருப்பினார்கள். அறிவின்மையிலும் மூட பழக்கங்களிலும் ஆழ்ந்து கிடந்துள்ள மக்களை ஈடேற்றுவதற்காக வலிய முறைகளையே கைக்கொண்டார்கள். எந்தச் சமயமும் தான் பெருகுவதற்கு இம்முறையையே கொண்டிருந்ததல்லவா? சரித்திரம் ஆராய்வோர்கள் இதன் உண்மையை அறிவார்கள். தற்காலத்தில் சாத்விகப் பிரசாரம் மேன்மையானதென்று பேசுகிற சில சமயத்தார்கள் முற்காலத்தில் தம் மத சரித்திரம் எவ்விதமாய் ஏற்பட்டதென்பதை மறைத்து வைக்க வந்தவர்களேயாவார்கள். ஆகவே, நம சைவர்களும் சைவ சமயம் முன்னடையவேண்டும் என்றால் நமது சமயாசாரியர்கள் காட்டிய முறைகளைப் பின்பற்றுவதே வெற்றிக்கு உகந்ததாகும்.

மேலும், சைவசமயம் ஆதிகாலத்தில் ஏனைய மக்களை உட்கொள்ளும் (ஆகர்ஷண) சமயமாக இருந்தது. சமண சமயத்தில் இருந்த பாண்டிய மன்னரைச் சம்பந்தப் பெருந்தகையார் திருநீறு கொடுத்துச் சைவத்தில் ஏற்றுக்கொண்டார். தருமசேனராயிருந்த மருள்நீக்கியார் சைவராகித் திருநாவுக்கரசரானார். மதுரையைச் சுற்றிலும் எண்பெருங் குன்றங்களில் இருந்த பல சமணாசாரியர்கள் திருநீறு பெற்றுச் சைவரானார்கள். இன்னும் ஹூணர்கள் முதலிய பல மிலேச்சர்கள் இந்நாட்டுச் சமயங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். நமது சமயாசாரியர்கள் இக்கொள்கைக்குப் புறம்பாக இருக்கவில்லை. இக்காலத்தில் மட்டும் இக் கொள்கையை ஏன் கைக்கொள்ளக் கூடாதோ?

மேலும் சைவசமயம் பரவும் சமயமாயிருந்தது. அப் பரப்புக்குத் தகுந்தபடி பிரசாரம் செய்யப்பட்டது. தேவாரத் திருப்பதிகங்கள் மூலமாக நாடெங்கும் சமயக்கொள்கைகள் பரப்பப்பட்டன. ஆலயங்கள் நிர்மாணிக்கப்பட்டு அங்கே சமய போதனைகளும் பதிகம் ஓதுதலும் ஏற்படுத்தப்பட்டன. சித்தாந்த போதனைகள் மக்களுக்குப் பதிகங்கள் மூலமாகப் போதிக்கப்பட்டன. சைவசமயம் இயற்கைச் சமயம் என்பது எடுத்துக்காட்டப்பட்டது. தேவாராதிகளில் புதைந்து கிடக்கும் சுவைகளும் சரித்திர ஞானமும் சமய ஞானமும் எப்படிப்பட்டவர்களையும் இழுத்துத் தூய நன்மக்கள் ஆக்கிவிடும். இத்தகைய சமயப் பிரசாரத்துடன் சமூக வாழ்வில் சீர்திருத்தமும் ஏற்படும்படி சமயாசாரியர்கள் தம் வாழ்வுகளில் நடத்தியும் காட்டியிருக்கிறார்கள். திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீல நக்கர், அப்பூதியடிகள், பாணபத்திரர் முதலிய பெரியார்களின் சரிதங்களை நாம் ஆராய்ந்து பார்த்தால் தற்காலத்திலுள்ள பிறவி வேற்றுமைகள் முற்காலச் சைவர்களிடத்தில் இருந்திருக்கவில்லை என்று உறுதியாகச் சொல்லலாம்.

ஆனால், நாம் என்ன செய்கின்றோம்? நமது நாட்டுச் சமயங்கள் "சனாதனம்" (நிரந்தரமானவை) என்று சொல்லிப் பெருமை பேசிக்கொண்டிருக்கின்றோம். பல்லாயிரக்கணக்கான தாழ்ந்த வகுப்பார் என்பவர்கள் கிறிஸ்துவ முகம்மதிய மதங்களுக்குச் சென்று கொண்டிருக்கையில், "போகட்டும, எத்தனைபேர் போனாலும் நமது சமயம் தொலையாது" என்று சொல்லிக்கொள்ளுகிறோம். இவ்வாறு கண் மூடிக்கொண்டு வேதாந்தம பேசுவதினால் ஒரு பலனும் இல்லை. நம சமயங்களைவிடப் பெரும்படியான எண்ணம் கொண்ட பல சமயங்கள் முற்காலத்தில் அழிந்துவிட்டன. நாமும் நம் மக்களைப் புறம்பே தள்ளிக்கொண்டிருந்தால் சமயச் செல்வாக்குச் குறைவுமேயன்றி முன்னேற்றமடையாது.

(தொடரும்)

# அட சிவனே!

"சுவாதி"

சிவனே என்று நான் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன், சிவன் எமன் மாதிரி வந்து சேர்ந்தான். கைலாசவாசியான சிவனல்ல வந்தது; வந்தது எனது சிநேகிதன் சிவன். அவன் நடந்து வந்திருந்தால் தூரத்தில் அவன் வரும்போதே நான் பார்த்து விடுவேன்; பதுங்கியும் விடுவேன்.

அவன் ஒரு மோட்டார் ஏறி வந்தான். மோட்டார் நாம் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருக்கும்போது எமனுக இருப்பதில்லையாதலால் நான் சிவனே என்று மேற்கூறியவாறு உட்கார்ந்து இருந்துவிட்டேன் சிவனும் வந்துவிட்டான். காரைவிட்டுக் குதித்தான். "வாராயாடா கணேசா?" என்றான். எனக்கு வயிற்றில் பகீரென்றது நான் மரண பண்டு கட்டவில்லை. அப்படியிருக்கும்போது சிவனோடு, அவன் விடும் மோட்டாரில், சவாரி செய்வது உசிதமில்லை.

ஆனால் அவன் கூப்பிடும்போது வரமாட்டேன் என்று சொல்ல முடியாது. அதனால் "இரு ஷர்ட் போட்டுக்கொண்டு வாறேன்" என்று உள்ளே போனேன். பேசாமல் பத்து நிமிஷம் உட்கார்ந்திருந்தேன். அதற்குள் சிவன் விடாமல் மோட்டார் ஹோர்னை அடித்தான். நான் மெள்ள வெளியே வந்து, "அடே சிவா! கோபித்துக்கொள்ளாதே. நான் இப்பொழுது வரவில்லை. என் மனைவி எங்கேயோ வெளியே போகவேண்டும் என்கிறாள் என்றேன்.

உடனே சிவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "அடே! சரிதான்டா! நடக்கிறது வாடா! நான் புதுக்கார் வாங்கியிருக்கிறேன். கூப்பிடுகிறேன், வரமாட்டேன் என்கிறாயே" என்றான்.

சிவன் கார் பழையதுதான். ஆனால் அவனுக்குப் புதிதாகையால் புதுக்கார் என்றான். அவன் வற்புறுத்தவே நான் தட்டமுடியாமல் சிவன் மீது பாரத்தைப் போட்டுக் கிளம்பினேன்.

சிவன் மோட்டார் "ரோட் ரோலர்" மாதிரி சப்தம் போட்டுக் கொண்டு ஓடிற்று. நானும் சிவன் பக்கத்தில் முன் சீட்டில் உட்கார்ந்திருந்தேன். சிவன் காரை பீச் ரோட்டில் விட்டான். என்னைப் பார்த்து, "அடையாறு வரையில் போய்விட்டுத் திரும்பலாம்" என்றான்.

கார் "கர்புர்" என்று சப்தமிட்டுக் கொண்டே போயிற்று. எங்கள் கார் போய்க்கொண்டிருக்கும்போது முன்னால் ஒரு சின்னக் கார் குடுகுடென்று ஓடிக்கொண்டிருந்தது. அந்தக் காரை முந்திக்கொள்ள வேண்டுமென்று சிவன் ஹோரன் அடித்தான் அந்தக் காரிலிருந்து ஒரு ஸ்திரீயின் கை வெளிப்பட்டு ஒரு சுழல் சுழன்றது. சிவன் உடனே காரை வேகமாக விட்டான்.

எங்கள் கார் அந்தக்காரை முந்தும் சமயம் அந்தக் கார் தடார் என்று திரும்பிவிட்டது. அதன் மேல் மோதாமல் குறுக்கும் நெடுக்கும் கோணல் மாணலாக ஓட்டிச் சிவன் காப்பாற்றினான்.

உடனே வசவுபுராணத்தை ஆரம்பித்தான். ஐந்து நிமிஷம் மூச்சுவிடாமல் அந்த ஸ்திரீயின் தலைமுறைகளிலிருந்து இழுத்தான்.

பிறகு தன் வேதாந்தத்தை அவிழ்த்தான். "ஸ்திரீகளுக்கு மோட்டார் ஓட்டவே லைசென்ஸ் கொடுக்கக்கூடாது" என்றான். சிவனுக்குக் கொடுத்திருக்கும்போது வேறு யாருக்குத்தான் கொடுக்கக் கூடாது? ஆனால் நான, "சிவ! வாஸ்தவம்" என்றேன்.

உடனே கம்பீரமாகத் தலையை நிமிர்த்து கொண்டு சிவன் "பார்! அந்த ஸ்திரீயை இப்பொழுது பார் இரண்டு உயிர்களுக்கு சேதத்தை உண்டாக்கி இருப்பாளே கையைச் சுழற்றிக் காட்டினாளே. என்ன அர்த்தம்?" என்றான்.

அதன் அர்த்தம் அந்த ஸ்திரீக்குத்தான் தெரியும் என்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் சிவனிடம், "மகா மோசம்" என்றேன்

சிவன் அதற்குள் பேச்சை மாற்றித் தன் பிரதாபங்களை ஆரம்பித்தான்.

"மோட்டார் விடுவதற்கு நல்ல பழக்கம் வேண்டும். மோட்டார் ஓட்டுவது சம்பந்தமான ரஸ்தா விதிகள் நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் ஓட்டலாம் சும்மா நானும் ஓட்டுகிறேன்; நீயும் ஓட்டுகிறாய் என்றால் முடியுமா? நான் எவ்வளவோ கவனமாக இருக்கிறேன்." என்றான்.

"ஆமாம், ஆமாம்" என்றேன் நான். ஆமாம் என்று என் வாய்தான் சொல்லிற்று. என் மனம் மட்டும் படபடவென்று அடித்துக்கொண்டது. எந்த நிமிஷத்தில் பாவி எங்காவது மோதி என் உயிருக்கு உலை வைத்துவிடுவானோ என்று எனக்குப் பயம்.

சிவன் மறுபடி தொடர்ந்து, "ஒரு நாய் தெருவில் குறுக்கே போனாலும் நான் கவனித்துப்போவேன். ஒரு அங்குலம் தூரத்தில் அப்படியே நிறுத்துவேன்" என்றான்.

"ஓகோ" என்றேன்.

"இப்பொழுது வேண்டுமானால் பார்! நான் உனக்குக் காண்பிக்கிறேன். நல்ல வேகத்தில் நான் விடுகிறேன். நீ நில் என்று சொல்லி முடிக்கு முன் நான் நிறுத்திவிடுகிறேன். பார்!" என்றான் சிவன்.

எனக்குநெஞ்சு உலர்ந்துவிட்டது. மிகக் கஷ்டப்பட்டு, 'ஹோ! அது எதற்கு, எனக்குத் தெரியாதா உன் சாமர்த்தியம்!" என்றேன்.

ஆனால் சிவன் அதற்குள் மோட்டாரை வேகமாகவிடத் தொடங்கிவிட்டான். மோட்டார் 50 மைல் வேகத்தில் பறந்தது. அதை நிறுத்தினுலொழிய எனக்குப் பயம் விடாது போலிருந்தது. அதை நிறுத்த ஒரே வழிதான் உண்டு அவன் சொன்னபடி 'நில்' என்று கத்தவேண்டியதுதான்.

வீதி அகலமாய் இருக்கும் ஓரிடம் வந்ததும் தைரியமாக, 'நில்' என்றேன். உடனே சிவன் "பிரேக்" போட்டான். காலை வைத்து அமுக்கின வேகத்தில் கையை விட்டுவிட்டான். தடார் என்று ஒரு சப்தம் கேட்டது. நான் கண்ணை மூடிக்கொண்டு விட்டேன். கார் பக்கத்துச் சுவர் ஒன்றின் புஸ்திவாரம் சரிதானா என்று பார்த்துக்கொண்டிருந்தது. நான் கண்ணை விழித்துப் பார்த்தபோது காருக்குச் சேதம் அதிகம் இல்லை. 'மட்கார்டு' இரண்டும் நசுங்கிவிட்டன. மூலை' பத்திரம இனி உபயோகப்படாமல் போய்விடும், அவ்வளவுதான்.

சிவன் காருடன் முனைந்து கொண்டிருக்கும்போது ஒரு போலீஸ்காரன் எங்கிருந்தோ முளைத்துவிட்டான்.

அடுத்த வெள்ளிக்கிழமை சிவன் போலீஸ் கோட்டுக்குப் போய்விட்டு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நான் வைத்தியசாலைக்குப் போய் வருகிறேன். சு மி.

# நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலை

### சுகாதார மந்திரியாரின் தரிசனை

சென்ற ஆகஸ்டு மாதம் 9 ம் திகதி முற்பகல் 9 மணியளவில், சுகாதார மந்திரியாராகிய, கௌரவ W. A. de சில்வா அவர்களும், அவர்களின் பாரியாரும் நாயன்மார்கட்டு ஆயுள்வேத வைத்தியசாலையைத் தரிசித்தார்கள். அவர்களை அரசாங்கசபையின் தலைவரும், மேற்படி வைத்தியசாலையின் மேற்பார்வைச் சபையின் அக்கிராசனருமாகிய, கௌரவ W. துரைசுவாமி அவர்களும், மேற்பார்வைச் சபையின் மற்று அங்கத்தவர்களும், வைத்தியசாலையின் பிரதம வைத்தியராகிய Dr. V. S. இராமநாதன் L. I. M. அவர்களும் வரவேற்றார்கள்.

மந்திரியாரவர்கள் வைத்தியசாலையின் மருந்துச் சாலையையும், புத்தகசாலையையும், மருந்து தயாரிக்கும் சாலையையும், நோயாளிகள் இருக்கும் பகுதிகளையும் தரிசித்தபின், வைத்தியசாலையைப்பற்றித் தனக்கிருக்கும் அபிப்பிராயத்தை வெளியிட்டார்கள். புத்தகசாலையிலிருக்கும் வைத்தியப் புத்தகங்களையும், பழைய ஏடுகளையும் பார்த்தது தனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்ததென்று குறிப்பிட்டார். மேலும் வைத்தியசாலை நடத்தப்படும் விதம் திருப்திகரமானதென்றும், நோயாளிகள் பெறும் கவனம் வியக்கப்படக் கூடியதென்றும் அறிவித்தார்.

வைத்தியசாலை மேற்பார்வைச் சபையின் அங்கத்தவர்களுடன் மந்திரியார் கலந்துபேசியபொழுது, ஆயுள்வேத மருந்துச்சாலைகளுக்கு அரசினர் கொடுக்கும் நன்கொடைக்குரிய புதிய பிரமாணங்களைப்பற்றிய ஒரு பிரதான விஷயமாய்ப் பேசப்பட்டது. மருந்துச் சாலைக்கு இப்பொழுது கொடுபடும் நன்கொடைப் பணத்தின் தொகை கூட்டப்பட வேண்டுமென்றும், மேலும் வைத்திய சாலைக்கு ஒரு நியாயமான பணத்தொகை நன்கொடைப் பணமாக உதவப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது.

மேற்குறிக்கப் பட்ட வைத்திய சாலை இலங்கையிலிருக்கும் ஆயுள்வேதஸ்தாபனங்களுள் சிறந்ததென்று காட்டப்பட்டது. இதை மந்திரியார் ஒத்துக் கொண்டார், ஆனால் வேத வைத்தியசாலை ஒன்றுக்கும் இன்னும் அரசினர் நன்கொடைப் பணம் உதவவில்லை என்றும் போதிய நியாயம் காட்டினால் மேற்படி வைத்திய சாலையின் வேண்டுகோள் கவனிக்கப் படுமென்றும் சொன்னார்.

வைத்தியசாலை "லொக்" புத்தகத்தில் மந்திரியார் பின்வருமாறு குறிப்பிட்டார்:–

ஆகஸ்டு மாதம் 9 ம் திகதி 1936 இந்த வைத்தியசாலையை நான் 1925-ம் ஆண்டில் தரிசித்துள்ளேன். என்னுடைய நம்பிக்கையின்படி இது இலங்கையிலிருக்கும் ஆயுள்வேத வைத்தியசாலைகளுள் அதிக பழமையானது. அதன் வைபவம் நூற்றுக் கணக்கான வருடங்களுக்குச் செல்லும். பண்டைக் காலத் தொடக்கம் இக் காலம் வரையும் அதன் வைத்தியர்கள் தங்களுடைய கடமையைச் சிறப்பாகவும், ஆயிரக்கணக்கான நோயாளிகளைச் சுகப்படுத்தியும் நடத்தியிருக்கிறார்கள். சுதேச வைத்தியத்தின் முன்னேற்றத்தை விரும்புபவர்கள் எல்லாரும் இந்த வைத்திய சாலைக்கு உதவி புரிய வேண்டும். வைத்தியசாலையைப் பெருப்பிக்கும் நோக்கமாகப் புதுக் கட்டிடங்கள் கட்டுவதற்காகக் காசு சேர்ப்பதற்கு ஒரு வேண்டுகோள் வெளியிட்டால் அவ் வேண்டுகோள் நிறைவேற்றப்படுமென்பது எனது மனப் பூர்வமானநம்பிக்கை."

W. A. de. சில்வா
சுகாதாரமந்திரி

மந்திரியாரும் அவர் பாரியாரும் வைத்தியசாலையை விட்டுப் புறப்படு முன் அவர்களை மத்தியாய் வைத்தும், வைத்தியசாலை மேற்பார்வைச் சபை அங்கத்தவர்கள், வைத்திய சாலையின் பிரதம வைத்தியர், வைத்தியசாலையின் தொழிலாளர்கள் எல்லோரையும் அடக்கியுள்ள ஒரு புகைப்படம் எடுக்கப்பட்டது.

இங்ஙனம்
கா. அருளம்பலம், காரியதரிசி

# "எங்களுக்குள் போட்டி உண்டா?"

## "ஹரிஜன" பத்திரிகையில் காந்திஜீஎழுதியது

### "ஆரம்ப முதல் இன்றுவரை எங்களது லக்ஷியம் காங்கிரஸின் லக்ஷியமாகவே இருக்கின்றது"

வார்தா ஜூலை 22

மகாத்மா காந்தி சனிக்கிழமை வெளியான "ஹரிஜன" பத்திரிகையில் "எங்களுக்குள் போட்டி உண்டா" என்ற தலைப்புடன் பின்வரும் வியாசத்தை எழுதியுள்ளார்:–

"பண்டித ஜவாஹர்லால்நேருவுக்கும் எனக்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றித் தவறான செய்திகள் பிரசுரமாகி வருகின்றன. அவைகளில் சில செய்திகள் எனக்கு அனுப்பப்பெற்றன. எனது வார்த்தைகளென்று வர்ஜிதமாகச் சில விஷயங்களைப் பிரசுரித்திருக்கின்றனர். நான் பின்வருமாறு கூறியதாகவும் வெளிவந்துள்ளது:-

'நான் எனது வாழ்க்கையில் செய்த வேலை ஜவஹர்லாலின் வேலைத்திட்டத்தால் அழிந்து வருகிறது. நேருவின் கொள்கை தீங்கிழைத்தது போல் பிரிட்டிஷ்சர்க்காரின் அடக்குமுறைகூட எனது வேலைக்குத் தீங்கிழைக்கவில்லை.'

எனக்கு அனுப்பிய இரு வியாசங்களில் நான் கூறியதாகக் கண்டுள்ள ஒரு வார்த்தையாகிலும் ஒரு விஷயத்தையாகிலும் நான் கூறியதே கிடையாது. அந்தச் செய்திகளில் கண்டுள்ள அபிப்பிராயங்கள் கூட எனது அபிப்பிராயங்களுக்குச் சிறிதும் ஒத்திருக்கவில்லை. பலாத்கார முறைகளில் இந்தியா சுதந்திரமடைய முடியாதென்றும், அஹிம்சா தர்ம முறைகளிலேயே சுதந்திரம் பெற முடியுமென்றும் பண்டித ஜவஹர்லால் தணித்துள்ளாரென்பது எனக்குத் தெரியும். லட்சுமணபுரியில் அவர் பூரண சுயேட்சைப் போராட்டத்தில் பலாத்கார முறையை அநுசரிக்க வேண்டும் என்று வற்புறுத்தவில்லையென்பதை நானன்கறிவேன்.

எங்களுக்குள் அபிப்பிராய பேதமிருக்கிறதென்பது உண்மையே. சில வருஷங்களுக்கு முன்பு எங்களுக்குள் நடந்த கடிதப் போக்குவரத்துக்களில் அவ் விஷயமானது தெளிவாகக் குறிப்பிடப்பெற்றது. நிருபர்களுக்கு விடுத்த பதிலிலும் நாங்கள் குறிப்பிட்டோம். இன்று வரையில் எங்களுக்குள்ள அபிப்பிராய பேதங்கள் என்னவென்பதையும் கூடிய சீக்கிரம் வெளிப்படுத்தலாமென்றும் நான் கருதுகின்றேன். எங்களது அபிப்பிராய பேதங்கள் எங்களுக்குள்ள அன்யோன்ய சம்பந்தத்தை எவ்விதத்திலும் பாதிக்கவே இல்லை. ஆரம்பமுதல் இன்று வரையில் எங்களது லட்சியம் காங்கிரஸின் லட்சியமாகவே இருந்து வருகிறது. நான் எனது வாழ்க்கையில் செய்துள்ள வேலை ஜவஹர்லாலின் வேலைத் திட்டத்தால் அழியவுமில்லை. அழியமுடியாது. பிரிட்டிஷ் சர்க்காரின் அடக்குமுறையைவிட ஜவஹர்லாலின் வேலைத்திட்டம் எனது வேலைக்குத் தீங்கிழைத்துவிட்டதென்று நான் கூறவில்லை. தீங்குநேழுவதற்குக் கூட இடம் தருவது எனது சித்தாந்தம் அல்ல. மேற்கொள்ளும் கொள்கையோ செய்யும் காரியமோ கெட்டதாகவிருந்தால் மட்டுமே அதற்குத் தீங்கு ஏற்படும்.

அந்தக் கட்டுரையானது 'காந்தியின் ரகசிய திட்டங்'களைக் குறிப்பிடுகிறது. எனக்கு காந்தியைத் தெரியாதென்று கூறவே முடியாது. அவருக்கு அவரது வாழ்க்கையில் ரகசிய திட்டங்கள் இருந்ததே கிடையாது. 'ஹரிஜன' வாசகர்களுக்குத் தெரிந்ததைவிட எனக்கு வேறு திட்டம் எதுவும் தெரியாது. எனக்கே ஒன்றும் தெரியாது.

மற்றொரு கட்டுரையானது ஜவஹர்லால்நேருவும் நானும் போட்டிக்காரர்களென்று குறிப்பிடுகிறது. ஜவஹர்லால் நேருவுக்கு நான் போட்டியென்றோ அல்லது அவர் எனக்குப் போட்டியென்றோ கருத முடியாது. பொது லட்சியத்தை அநுசரிப்பது ஒருவரை யொருவர் நேசிப்பதிலேயே நாங்கள் போட்டி போட்டுக்கொள்கிறோம். பொது லட்சியத்தை அடையச் சேர்ந்து வேலை செய்யின் நாங்கள் சில சமயங்களில் வெவ்வேறு மார்க்கங்களில் செல்வதாகத் தோன்றுமே தவிர வேறில்லை. சிறுகணமே நாங்கள் ஒருவரையொருவர் பிரிந்திருப்போமென்றும் மீண்டும் மிக்க நேசத்துடன் கூடுவோமென்றும் உலகம் நன்கு அறிந்துகொள்ளுமென்று நம்புகின்றேன்.

## பாலஸ்தீனத்தில் கொலையும் அட்டூழியமும்

ஜெருஜலம், ஆக 14—

நேற்றிரவு பாலஸ்தீனத்தில் ஒரு கோரமான அட்டூழியம் நடந்தது. ஹெப்ரான் மேயரான நாஸர் சாஸ்ரியை யாரோ ஒருவன் கொலை செய்துவிட்டான்.

ஹாரானிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு யூதக் காவற்காரர் மீது மறைவிலிருந்து ஒருவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது காரணமாக அந்த யூதர் காயமடைந்து பிறகு உயிர் நீத்தார்.

### யூதக் குடும்பம் கொலை

அராபியர் ஸாபத்திலுள்ள யூதர் வாசஸ்தலத்தின் மீது வெடிகுண்டுகளைப் பொழிந்து, துப்பாக்கிப் பிரயோகம் செய்தது காரணமாக மூன்று குழந்தைகள் உள்பட ஒரு யூதக்குடும்பம் முழுதும் அடியோடு அழிக்கப்பட்டுவிட்டது.

## யாழ்ப்பாணம் புகையிலைக் கமக்காரர்களுக்கு ஏற்படும் நட்டம்

கமக்காரர்களே!

இச் சங்கம், அங்கத்தவர்களுடைய புகையிலையை ஒரு ஒழுங்குமில்லாமல் சந்தை விலையிலும் பார்க்கக் குறைத்து விற்றதினால் யாழ்ப்பாணக் கமக்காரருக்கு அதிகம் நட்டத்தை விளைவிக்கிறார்களென்னும் ஓர் பொய்யான கதையைச் சென்ற ஆண்டில் சில ஆட்கள் ஊரில் பரப்பினார்கள். இவ்வாண்டுத் தொடக்கத்திற் சில போதிய வியாபாரிகள் சங்க மனேச்சரையும் வேறு சில ஆட்களையும் கண்டு விலையைக் கட்டுப்படுத்தினால் நன்று என யோசித்து அதற்கு ஆகவேண்டிய சில ஒழுங்குகள் செய்தனர்.

ஆனால் இப்போது சங்கப் புகையிலையை விற்க ஏற்பட்டிருப்பவராகிய திரு எஸ். எக்ஸ் பெரேறு அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்.

"சென்ற பத்து நாட்களாகக் கொல்லத்தில் வியாபாரிமார்களுடைய புகையிலையை விற்பனைசெய்யும் தரகர்மார் எல்லாத் தினசுக்கும் சந்தை விலையிற் பார்க்க ரூபா 10 தொடக்கம் ரூபா 40 வரைக்கும் குறைத்து விற்கிறார்கள். அவர்களிலும் 6 நம். லைசென்ஸ் காரன் கண்டபாட்டுக்குக் குறைத்து விற்கிறார். இதை உங்களுக்கு அறிவிக்கிறோம்."

இப்படியானால் யாழ்ப்பாணக் கமக்காரபாடு எப்படி முடியுமோ தெரியவில்லை.

கமக்காரர்களே!

இதன் உண்மையை நன்கு விசாரித்து இதற்குச் செய்யவேண்டிய பிராயச் சித்தத்தை நீங்களே செய்யுங்கள்.

நா. அ. சுப்பையா
காரியதரிசி & மனேச்சர்
யா. ம. பு. ஐ. வி. ச.
யாழ்ப்பாணம்
14 - 8 - 36.

பாலர் பகுதி

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

அன்புள்ள மருமக்காள்!

சென்ற வியாழக்கிழமைக்கு முந்தின வியாழக்கிழமை வெளியான இந்துசாதனத்தில், "ஒரு சைவப் பெரியார்" என்னும் விஷயமாக எழுதப்படும் சிறந்த கட்டுரைக்கு மற்றும் ஒரு பரிசு கொடுக்கத் தீர்மானித்திருப்பதாக எழுதியிருந்தேன். ஸ்ரீ ல ஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களைப்பற்றியே இம்முறையும் ஒரு மருகரால் எழுதப்பெற்றிருக்கிறது. பொதுநாயகம் என்னும் இம்மருகர்க்கே இம்முறை பரிசு வழங்கப்படும். இந்துசாதனத்தில் வெளியாகும் பாலர் பகுதியில் மருமக்கள் ஊக்கம் எடுத்துவருவது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். அடுத்த முறை உங்களுக்கு என்ன விஷயத்தைப்பற்றி எழுதவேண்டுமென்பதை என் அன்பிற்குரிய மருகர்கள் தெரிவித்துக்கொள்வார்களானல், அவ்விஷயத்தைப்பற்றி நான் எழுதுதற்கு ஆயத்தமாக இருக்கின்றேன். ஆதலால், மருகர்கள் தவறுமல் தங்களுக்கு வேண்டிய விஷயத்தைத்தெரிவிப்பார்களென நம்புகின்றேன்.

இங்ஙனம்
உங்கள் அன்புமறவாத,
**சுப்புமாமா**

---

## இம்முறைபரிசுபெற்ற பாலர் கட்டுரை

விக்ரோரியாக் கல்லூரி
சுழிபுரம்.

### ஆறுமுகநாவலர் பிறப்பு

இந்த யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே கார்காத்த வேளாள வருணத்திலே பாண்டிப்புலவர் குடியிலே ஞானப்பிரகாச சுவாமிகள் மரபு நெடுங்காலமாகத் துலங்கி வந்தது. இம்மரபில் இலங்கை காவல் முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய புதல்வர் பரமானந்தர் என்பவர். அவருடைய பிள்ளைகள் கந்தர் இலங்கையர் என்பவர். இவர்கள் இலங்கையரொழிந்த மூவரும் ஒல்லாந்தர் காலந்தொட்டு ராச உத்தியோகம் படைத்தவர். இலங்கையர் முதலியாரும் பரமானந்தரும் ராசவைத்தியர்களாயிருந்து கொழும்பிலிருந்த ஒல்லாந்த அரசனுக்குற்ற தீராத நோயை மாற்றிப் பரிசுகளும் பட்டங்களும் பெற்றவர்கள். அன்றியும் இவரெல்லாம் பரம்பரையான தமிழ்ப்புலமை வாய்ந்தவர்கள். கந்தர் என்பவர்கள் அநேக நாடகங்கள் தமிழில் இயற்றியிருக்கின்றார். வைத்தியத்தில் அதிக சாமர்த்தியமுடையவர். இவருக்குச் சிவகாமி என்னும் மனைவியாரிடம் 5 ஆண்மக்களும் 3 பெண்மக்களும் பிறந்தார்கள். சிறு வயசிலே இறந்த பிள்ளைகளுமுண்டு. இவர்களுள் ஒருவராகிய பரமானந்தர் என்பவர் பாக்கள் இயற்றுவதிலே தீராவிப் புலவரென்னும் பட்டம் பெற்றிருந்தார். இறுதியிற் பிறந்த பிள்ளை ஆறுமுக நாவலரென்பவர்.

இவர் சித்திரபானு வருஷம் மார்கழி மாசம் 5-ம் திகதி புதனகிழமை இரவு அவிட்ட நக்ஷத்திரமும் பூர்வபக்ஷ பஞ்சமிதிதியும் வச்சிரயோகமும் பாலவகாணமும் கூடிய வேளையிலே சிங்கலக்கினத்திலே நல்லூரிலே தமது தந்தையார் வீட்டிற் பிறந்தவர்,

### படித்த காலம்

ஆறுமுக நாவலரை அக்காலத்தில் நல்லூரிலே ஒரு சிறிய பள்ளிக்கூடம் வைத்துப் படிப்பித்துவந்த சுப்பிரமணியபிள்ளை என்பவரிடத்தில் கல்விகற்குமாறு அனுப்பினார்கள். அக்காலத்தில் அவரிடத்தில் இவர் மூதுரை முதலிய நீதிநூல்களும் நிகண்டு முதலிய கருவிநூற்களும் கற்றுவந்தார். இவருக்கு ஒன்பதாம் வயதாகும்பொழுது ஆனித் திருமஞ்சன உற்சவகாலத்தில் இவருடைய தந்தையார் ஒரு நாடகம் பாடிக்கொண்டிருந்த சமையத்தில் கையில் எழுத்தாணியும் சட்டமும் பிடித்தபடியே சடுதியிற் சிவபதம் அடைந்துவிட்டார். அந்த நாடகத்தின் குறையை அப்போதே இவர் பாடிமுடித்தார். அவர் படிக்கப் போகும்போது இவருடைய சரீரம் மிகப் பருத்தும் மறற உறுப்புகள் சூம்பியும் இருந்தமையால் அயலாரும் வீட்டாரும் இவரைப் பாணுத் தலையரென நாம் வாற்பத்தையனென்றுஞ் சொல்லுவார்கள். இவர் எந்தப் பெரிய பாட்டுக்களையும் ஒருவர் படித்தாலும் படித்து முடிதற்குள் அவற்றிலுள்ள பஞ்சலக்கணப் பிழைகளையும் முறைமையே சொல்லுவார். இவருடைய கல்வித் திறமையைக் கண்ட உபாத்தியாயர்கள் இவரிடத்திலே மிகப்பிரிதியுடையவர்களாயிருந்தார்கள். அதன்பின் தமிழில் இவருடைய திறமையைக் கண்ட தமையனமார் இவரை (பீற்றர் பார்சிவல்) என்னும் பாதிரியாருடைய இங்கிலிஷ் பள்ளிக்கூடத்திறகு இங்கிலிஷ் கற்குமாறு அனுப்பினார்கள். அக்கல்வியிலும் அவர் வெகு சீக்கிரத்தில் திறமை பெற்றார். அக்காலத்திலே அப்பள்ளிக்கூடத்திலே கற்ற மாணவர்களுள் இவரே இங்கிலிஷ் தமிழ் என்னும் இரு பாஷைகளையும் நன்கு கற்றவர் என்னும் பெயரும் இவருக்குண்டாயிற்று.

### படிப்பித்தல்

பிள்ளைகளுக்குப் பாடங்களை விளங்கப்படுத்துகிற சக்தி தமிழர்களுள் இவருக்கே படைக்கப்பட்டது. விளங்கப்படுத்துகிறபோது "ஏ" "ஆசை" என்னும் இரண்டு சொற்களை இடையிடையே சொல்லுவார். எவ்வளவு கடினமான பாட்டுக்களையும் விஷயங்களையும் மாணாக்கருடைய மனதில் நன்றாகப் பதியும்படி மிகத் தெளிவாக விளக்குவார். அர்த்தம் செய்யும்போதும் பிரசங்கம் செய்யும்போதும் "ஏ" "ஆசை" என்னும் சொற்கள் ஒருபோதும் வந்ததில்லை. இலக்கியத்தை இலக்கணத்திலும் இலக்கணத்தை இலக்கியத்திலும் அமைத்துப் பொருத்தி மாணாக்கர்களுக்கு நன்கு காட்டினவர் இவர் ஒருவரே.

### பிரசங்கம் செய்தமை

கார்த்திகேய ஐயரும் இவரும் பிரசங்கம் செய்துவரும் காலம். கார்த்திகேய ஐயருடைய பிரசங்க முறையொன்றில் பலசனங்கள் பிரசங்கம் கேட்க வந்திருந்தார்கள். ஐயர் அப்பொழுது ஓடிவந்து என்னுடைய தாயாருக்கு அதிக சுகவீனமாயிருத்தலால் எனக்கு இன்றைக்குப் பிரசங்கம் செய்ய இயலாது. தாங்களே இன்றைக்குப் பிரசங்கம் செய்தல் வேண்டும் என்று சொல்லிவிட்டு உடனே போய்விட்டார். அங்குள்ள சனங்கள் யாவரும் தாங்களே பிரசங்கம் செய்யுங்கள் என்றனர். அதற்கு அவர் இன்றைக்கு யான் பிரசங்கத்துக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டு வரவில்லை யென்றார். அதற்கு அவர்கள் பினனும் பிரசங்கம் செய்யும்படி நெருக்க அவர் சூனியத்திலிருந்து கடவுள் உலகத்தைச் சிருட்டித்தார் என்பதைப் பிரசங்கித்து முடித்தார். இப்படி இவர் பல ஸ்தலங்களிலே பிரசங்கம் செய்துவந்தார்.

### வித்தியாசாலை ஸ்தாபனம்.

நாவலர் வித்தியாசாலை ஸ்தாபிக்கப் பணமின்மையால் பல பிள்ளைகளைப் படிப்பித்துச் சம்பளம் பெற்று அதனையிட்டுப் பள்ளிக்கூடங்கள் கட்டவேண்டுமென்ற ஆசையால் இவர் யாழ்ப்பாணத்திலே வண்ணார்பண்ணையில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்னும் பெயர் கொடுத்து ஒரு வித்தியாசாலை ஸ்தாபித்தார். பின் தன்னிடத்திலே கல்விகற்ற சதாசிவம்பிள்ளை என்பவர்களையுபாத்தியாயர்களாக நியமித்தார். இதைப்பே ராலச் சிதம்பரத்திலே ஒரு வித்தியாசாலையும் ஸ்தாபித்தார்.

யாழ்ப்பாணத்திலே கந்தர்மடம், கொழும்புத்துறை, பருத்தித்துறை, மாதகல், இணுவில் முதலிய பற்பல இடங்களில் இவருடைய ஏதுவால் வித்தியாசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

### கிறிஸ்துமத கண்டனம்

யாழ்ப்பாணம் சிறிய நாடாயிருந்தாலும் ஏனைய பாதிரிமார் இதனையே விசேஷமாகக் கருதி வந்தார்கள். இங்கே நாவலர் பிறந்தகாலத்தில் வேம்படி, சுண்டிக்குளி, நல்லூர் கோப்பாய் புத்தூர் வட்டுக்கோட்டை மானிப்பாய் உடுவில் தெல்லிப்பளை என்னும் ஒன்பது முக்கிய ஸ்தாபனங்கள் புரோட்டெஸ்டாண்டுப் பாதிரிமாருக்கு உண்டு. இதிற் சிலர் கிறிஸ்துமதத்தைப் பரப்புவதற்காக நின்றனர், இவர்களெல்லாரோடும் இவர் தனியே நின்று போர்புரிந்தது மிக அருமையன்றே. இவருக்கு வேறு துணையுமில்லை. இங்கிலாந்து முதலிய இடங்களில் கிறிஸ்து மதத்தைக் கண்டித்து எழுதப்பட்ட புஸ்தகங்களுமில்லை. இவர் எல்லாம் தாது வருஷத்தின் பின்னே தான் இங்கு வந்தனர். இவர் வச்சிரகண்டம் என்னும் பத்திரிகையையும் வெளியிட்டார். இவருடைய கிறிஸ்துமத கண்டனப் பத்திரிகையையும் பிரசங்கங்களையும் கண்டும் கேட்டும் மயிர்த பாதிரிமார் ஒரு புத்தகத்தில் எழுதியிருக்கிறார்கள். சுன்னாகத்துச் சங்கரபண்டிதர் இவரோடு வந்து சேர்ந்து கிறிஸ்துமத கண்டனம் மிலேச்ச மத விகற்பம் என்னும் நூல்களை இவர் தூண்டுகோலின்படி செய்தார்.

### செய்த புண்ணியச் செயல்கள்

இவர் முற்காலத்திலே பல புண்ணியங்களைச் செய்து இருக்கிறார். அதாவது இடிந்துபோன நல்லூர்க் கந்தசாமி கோயிலைத் திருத்தியும்; இலங்கையிலேயுள்ள தேவாரம் பெற்ற ஸ்தலத்தில் ஒன்றாகிய திருக்கேதீச்சரம் அழிந்துபோனபடியால் அந்நிலம் அரசினர்க்காயிற்று. அதன்பின் அதை அவர் வாங்கி அதிலே இடிந்துபோன கோயிலைக் கட்டுவித்தார். அதன்பின் கீரிமலையிலும் சிவன்கோயிலைக் கட்டுவித்தார். இவர் இன்னும் பல இடங்களிலும் பல புண்ணியங்கள் செய்தார்.

### குணாதிசயங்கள்

தம்மை வந்து அடைக்கலம் புகுந்தோரைக் காப்பாற்றுவது தாங்கள் செய்த குற்றத்தை அறிந்து பச்சாத்தாபப்பட்டுத் தம்மை வந்து க்ஷமை வேண்டினவர்களைக் காப்பாற்றுவது முதலியன இவருக்குரிய விசேட குணங்களாம். இவர் ஒருநாள் ச

(தொடர்ச்சி 6-ம பக்கம்)

---

## ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்கள்

### 10 ரூபாய் பரிசு

"ஈழநாட்டுத்தமிழ்ப் புலவர்கள்" என்னும் பொருள்பற்றி எழுதப்படும் மூதற்திறமான கட்டுரைக்கு 10 ரூபா பரிசளிப்பதற்குக் கல்முனையில் ஆசிரியராக வேலை பார்க்கும் திரு. M. பீதாம்பரம் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். கட்டுரைகள் யாவும் ஜனவரிமீ 1-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். தகுதியுடைய சிலரே பரிசுக்குரியகட்டுரை இதுவெனபதை நிச்சயிப்பர். பரிசு பெருத கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

இங்ஙனம்,
மானேஜர்
இந்துசாதனம்.

---

## கதிர்காமதரிசனத்திற் கண்ட இரகசியம்

[சென்ற ஞாயிற்றுக்கிழமை (16 – 8 – 36) வெளிவந்த கொழும்பு "ஒப்சேர்வர்" பத்திரிகையில் வழக்கறிஞரும் சனத்தலைவருமாகிய மிஸ்டர் K. பாலசிங்கமவர்கள் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட மேற்படி வியாசத்தின் சுருக்கமான மொழிபெயர்ப்பு]

கதிர்காம யாத்திரை வாயிலாகத் தாமரும் ஏனைய யாத்திரிகர்களும் அறிந்து கொள்ளக் கூடிய நுட்பமொன்று உண்டு; சமயபேதம் பாராட்டாமை சமய சமரசமென்னு மிவைகளைப் பற்றிய கிளர்ச்சிகள் அதிகப்பட்டிருக்கும் இக்காலத்திலே இலங்கை வனமத்தியில் உள்ள தலமாகிய கதிர்காமத்திலே நாம் அனுபவத்திற் காணுதல் முடியும். புத்தபகவான் இலங்கைக்கு விஜயஞ் செய்த காலத்திற் றானும் கதிர்காமம் ஒரு புராதன தலமாக விருந்ததாம்; புத்தபகவான் இலங்கைக்குவிஜயஞ் செய்து 200 வருடங்கள் சென்ற பின்பே சங்கமித்தை வெள்ளரசமரத்தை இலங்கையில் நாட்டும்படி கொண்டு வந்தனளெனபது சரித்திரம்; சங்கமித்தைவெள்ளரசமரத்தை இங்கே கொண்டு வந்த சமயத்தில் அவ்விராசகுமாரியை உபசரித்தவருள் கதிர்காமத்து அரசனும் ஒருவனும். பௌத்தம் இலங்கையிற் பரவத் தொடங்கிய பின் மகாநாகன் என்னும்மன்னன் கிரிவிகாரையென்னும் பௌத்தாலயத்தைக் கதிர்காமத்தில் தாபித்தான்; ஆனால் அங்கு விளங்கியகதிர்காமக் கோயிலாகிய புராதன ஆலயத்திற்கு இப்புதிய ஆலயத்தால் எவ் வகையான இடையூறும் ஏற்படாதபடி அந்த அரசன அவதானமாக விருந்தான். அந்த ஆலயத்திலிருந்து சிறிது தூரத்திலேயே அரசன் புதிய விகாரையை அமைப்பித்துள்ளான். பிற்காலத்திலே துட்டகமுனு தமது பகையரசனாகிய எல்லாளனை வெல்வதற்குக் கதிர்காமத்தையனுடைய திருவருளை வேண்டிய சமையத்திற் கதிர்காமத் திருக்கோயில் கிலமான நிலைமையில் இருந்தது. எல்லாள மகாராசனை யுத்தத்திலே துட்டகமுனுகொனறு வெற்றியடைந்தபின்தான் முன் செய்த நியதியின்படி கதிர்காமத் திருக்கோயிலைப் புதுக்குவித்து அதற்குப் போதிய சர்வமானியங்களையும் திட்டஞ் செய்வித்தான். பௌத்த சமயம பரவியமையினாலே கதிர்காமத்தின் மகத்துவம் சிறிதேனுங் குறைந்து போகவில்லை. இலங்கையில அமைக்கப்பட்ட ஒவ்வொரு பௌத்தாலயத்திலும் கதிர்காமத் தெய்வத்திற்காகிய கோயிலும் அமைக்கப்படலாயிற்று; கதிர்காமத் தெய்வம இலங்கை இந்தியாவிலுள்ள தமிழ்மக்களின் காவற் கடவுள்என்ற அளவில் நின்று விடாமல், சிங்களராலும் தங்கள் காவற் கடவுள் என்று போற்றப்பட்டு வந்தது.

பிற்காலத்திலே இஸ்லாமியர் வட இலங்கையில் வந்து குடியேறியது போல் தென்னிலங்கையிலும் சென்று குடியேறியபோது தங்கள் பள்ளிவாசல்களிலும கதிர்காமத்து ஐயனுக்கு ஸ்தானம் வகிக்கலாயினர். கதிர்காம தரிசனத்தில் இந்துக்கள் பௌத்தர் சேர்ந்து பேதமின்றி இறைவனொருவன் எல்லாருக்கும் பொதுவாய் எங்குமுளன் என்ற கொள்கையோடு வழிபாடு செய்தல் அவதானிக்கத் தக்கதாம். கதிர்காமத்தில் நடைபெற்று வருவதாகிய இந்தச் சமரச வணக்கத்தைக் சாமானிய சனங்கள் மாத்திரமல்லர் குரு வகுப்பினரும் கைக்கொண்டு நடத்தலாகும். கதிர்காமக் கடவுளுடைய சந்நிதியிலே தாழ்ந்தவர் உயர்ந்தவர் சிறியார் பெரியார் என்ற பேதங்கள் சிறிதுமின்றி எல்லாரும ஒரே தன்மையினராக இறைவனை வழிபட்டு வருகின்றார்கள்; இந்த விதமான சமரச ஐக்கிய வணக்கம் கதிர்காமத்திலே யல்லாமல் இலங்கையிலாயினும் வேறு எந்த நாட்டிலாயினும் இப்படியான சமரச வழிபாட்டிற்கு உரிய இடம் இல்லை யெனலாம். இலங்கையிலே சிவனொளிபாதம் மடு முதலிய சிலஇடங்களில் வெவ்வேறு சமயவாதிகள்வழிபாட்டின்பொருட்டாக வந்து கூடுகின்றனரென்பது மெய். ஆனல் கதிர்காமத்திலே தான் ஒரு சமயவாத் மற்றைச் சமயத்தவர்க்குரிய தேவாலயத்தில் வழிபாடு செய்தலாகிய ஒற்றுமையான செயல் நடைபெறுகின்றது எனலாம்; இப்படியான வணக்கத்திலே வெவ்வேறு சமயக் குரு வகுப்பினரும் ஒற்றுமைகாட்டி நடக்கின்றனர். மேலும் சைவத் தெய்வத்தைக் கிரி விகாரையெனப்படும் பௌத்த கோவிலுக்கு எழுந்தருளச் செய்கின்றனர்; அந்த நேரத்தில் சைவர், பௌத்தர், இஸ்லாமானவர், கிறிஸ்தவர் எல்லாரும் இவர்களுடைய குருமாரும் உடன் சென்று வழிபாடு செய்யக் காணலாகும்.

ஒரு இஸ்லாமானவர் தம்முடைய சமயத்தினர்க்கு, மாணிக்ககங்கையில் ஸ்நானஞ் செய்தல் கதிர்காமத்தில் வழிபாடு செய்தல் என்னும் இவைகளைப் பற்றிப் பிரசங்கஞ் செய்யக் கேட்டுள்ளேன்; கதிர்காம வழிபாட்டிற் சாதி வித்தியாசம் பாராட்டாமற் செய்யப்படுவதாகிய சமரச வணக்கத்தைக் கண்டு கிறிஸ்துசமய வாதிகளும் வெட்கப்பட வேண்டியிருக்கின்றதல்லவா? அதாவது கிறிஸ்துசமய வாதிகளுக் கிடையிற்றானும் சாதி வித்தியாசம் சமயபேதம் பாராட்டாத வணக்கம் இல்லையென்பதாம். மேலும் இக் கதிர்காம தலத்தின் கண்ணே இறைவன் உருவமில்லாதவனாய், அருபியாக மதித்து வணக்கப் படுகின்றான்; அங்குப் பூசை செய்யும் குருமார் பிறர் கேட்கத் தோத்திரஞ் செய்யவும் ஏதும் மந்திரஞ் சொல்லவுங்காணேன்; இவைகள் செய்யப் படுவதில்லை யென்பதற்கு அடையாளமாக அவர்கள் தம் வாயை அந்த நேரத்திற் துணியினுற் கட்டிக் கொள்ளுகிறார்கள். இந்த விதான வணக்கம ஒரு அளவிற்குக் காசிவிசுவநாத கோவிலில் நடக்கக் கண்டுள்ளேன்......"

---

## சுருட்டிற் கஞ்சா

### எதிரியின் லைசென்ஸ் பறிமுதல்

யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் ஆசைபொன்னுத்துரை என்னும் பஸ் கொண்டக்டர் ஒரு சுருட்டிற் கஞ்சா வைத்துப் புகைத்ததாகக் குற்றஞ் சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. எதிரி குற்றத்தைஒப்புக்கொண்டார். நீதிபதி எதிரிக்கு 15 ரூபா அபராதம் விதித்தார். இதன்பின் நீதிபதி எதிரி ஓர் கொண்டக்டர் என அறிந்தும் கோட் சார்ஜன் ஏன் எதிரி தனக்கு ஒரு கொண்டக்டர் என அறிவிக்கவில்லை யென்றும் முன் அறிவித்திருந்தால் 50 ரூபா அபராதம் விதித்திருக்ககூடு மெனவும் கூறினர். பிறகு எதிரியுடைய கொண்டக்டர் லைசென்ஸை நீக்கி வைத்தார்.

---

### மானிப்பாயிற் கலகம்

எதிரிக்கு அபராதமும் நன்னடத்தையும்

சென்ற 18 – 8 - 36 செவ்வாய்க்கிழமை மானிப்பாயில் வசிக்கும் சுப்பிரமணியம் யோகரத்தினம் அவ்வூர் நாகமுத்து வேதவனம் என்பவரைக் காயப்படுத்தியதாக அவ்வூர் விதானையார் V. கந்தையாவால் தொடரப்பட்டவழக்கில் வழக்காளி எதிரி ஆகிய இருபக்கத்தாரும் சொந்தக்காரர் ஆகையால் ஒற்றுமைப்பட்டதாக நியாயதுரந்தர் திரு. யோசேப் சொன்னார். நீதிபதி எதிரிக்கு 20 ரூபா அபராதமும் 100 ரூபாவில் ஒருவருஷ நன்னடத்தையுமெனத் தீர்ப்புச் சொன்னர்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம் அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம்: தாதுவரு
ஆவணிமீ ருஉ வியாழக்கிழமை

## ஸ்பானிய யுத்தம்

ஸ்பானிய உள்நாட்டுக்கலகம் ஒருமாச காலத்துள் கொடிய பயங்கரமான யுத்தமாக மாறி விட்டதெனலாம். அரசினர் கட்சியார் கலகக்காரர் என்னும் இருபகுதியாரும் செய்யும் கோர யுத்த சமாசாரங்களைப் படிக்குந்தோறும் அவர்கள் பின் தம்முடைய நாட்டிற்கு வரும் தீமையைப் பற்றிச் சற்றேனுஞ் சிந்தியாது இரத்தப் பிரவாகத்தோடு கூடிய படுகொலையைச் செய்து வருகின்றார்களென்றே யூகிக்க வேண்டியிருக்கின்றது. இற்றைக்கு இருபது வருடங்கட்கு முன்னர் நடந்த மகாயுத்தத்திலும் இப்படியான உயிர்ச்சேதமும் அக்கிரமமும் படுகொலையும்நடந்ததில்லையெனலாம். பெண்கள் விருத்தர் நோயாளர் சிறுவர் சிறுமியர்கள் குருடு செவிடு ஊமர் என்ற பேதம் பாராமல் இந்த யுத்தத்திலே எவரும் வதைக்கப்படுகின்றார்கள்; மேலும் யுத்தத்திலே மாண்டவர்களைக்காட்டிலும் கூடிய தொகையினரைக் கலகக்காரர் பிடித்துச் சில நாட் சிறையிலிட்டுச் சுட்டும் வெட்டியும் தூக்கிட்டும் கொல்லுகின்றார்கள்; அருமையான புராதன கட்டடங்களைக் கோட்டைகளைக் குண்டுப் பிரயோகஞ் செய்து தகர்த்துவிட்டார்கள்; ஸ்பானிய நாடு முன்னொருகாலத்திலே படைத்திறனும் நாகரிகம் செல்வம் செல்வாக்கு முதலியவற்றாலும் சிறந்து விளங்கியதாகும். பின்னர் இடையிலே தன் பெருமை குன்றிக் கிடந்தது. இப்பொழுது பழையபடி சீரான நிலைமையை அடையத் தொடங்கும்போதே இந்த நாட்டிற்கு இப்பெரிய விபத்து நேர்தலாயிற்று.

அபிஸீனிய நாட்டிற்கு அந்நியராகிய இத்தலியரால் அழிவு ஏற்பட்டவாறு இந்த ஸ்பானிய நாட்டிற்கும் யாதும் விபத்துப் பிறரால் ஏற்பட்டால் காரியமில்லை. என்செய்யலாமென்று சமாதானங் கூறிவிட்டிருக்கலாம். ஆனல் இவ்விஷயத்தில் மூங்கிற் புதரில் மூங்கில் ஒன்றோடொன்று உரோஞ்சுண்டு அதனல் நெருப்புப்பற்றி அந்த மூங்கிற் புதரும் அயலிலுள்ள காடும் நெருப்புப்பரந்து ஒருங்கு எரிந்து சாம்பராந்தன்மை போல, உள்நாட்டுக் கலகமாக மூண்டு இப்பொழுது பெரிய யுத்தமாக முற்றியிருக்கும் இதனல் ஸ்பானிய நாடு மாத்திரமல்ல அயலிலேயுள்ள நாடுகளும் ! அயிரோப்பிய தத்துவ ராச்சியங்களும் இதிற் சம்பந்தப்பட்டுக் கேடடைதலுங் கூடுமல்லவா?

அயிரோப்பிய தத்துவ ராச்சியங்களில் ஒன்றென்று வைத்தெண்ணப்படும் ஸ்பானிய நாடு இப்படி அல்லோலகல்லோலப்பட ஏனைய தத்துவ ராச்சியத்தினர் என்ன செய்கின்றார்கள்; அவர்களெல்லாரும் தாங்கள் இந்த விஷயத்தில் ஒன்றுக்கும் பாராமல் ஒருகட்சிக்குந் துணையாகாமல் தனித்தனியே பட்சபாதமின்றிப் பொதுவாக நிற்கப் போகின்றார்களாம்; ஏன் இப்படி நிற்பான்? நிற்றற்குக் காரணம் உள்நாட்டுக் கலகமாம். மூங்கில்கள் உரோஞ்சுண்டமையாற் பற்றிய நெருப்புப் பரந்து அடுத்த வீடுகளிற் பற்றினலும் மூங்கில்கள் தம்மளவில் உரோஞ்சுண்டமையினற் பற்றிய நெருப்பென்றுசொல்லிவிட்டு அயல் வீடுகளில் வசிப்போர் வாளா இருந்து விடுவார்களா? உலக சமாதானத்தைப் பாதுகாக்க வந்த சர்வதேச சங்கம் இப்பொழுது எங்கே? அது என்ன செய்கின்றது? வல்லரசுகளென்று சொல்லப்படும் பிருத்தானியர் பிரான்ஸியர் ருஷியர் அமெரிக்கர் இப்பொழுது யாது செய்கின்றனர்; சர்வாதிகாரிகளென்று சொல்லப்படும் ஹெர் ஹிட்லர், முஸோலினி என்பவர்கள் இவ்விஷயத்தில் எவ்வாறு முயற்சிப்படுகின்றனர்? இவர்களெல்லாரும் இத் தத்துவ ராச்சியங்களெல்லாம் தனித்தனி "தான்தப்ப, தான்தப்ப" என்றமந்திரத்தைச் சதா தியானித்துக்கொண்டு உருத்திராக்கப் பூனை போல யோகத்தில் இருக்கின்றார்கள். ஸ்பானிய நாடு ஒருங்கு நாசமான பின்புதான் இவர்கள் யோகம் நீத்துக் கண் விழிப்பார்களா? இல்லையேல் இந்த யுத்தமென்னுங் கொடிய நெருப்புத் தம் நாட்டிலும் பற்றத்தொடங்கிய பின்தான் நித்திரை விட்டெழுந்து தத்தம் நாடுகளைப் பாதுகாக்கப் போகின்றார்களா? எதனையும் இருந்து பார்ப்போம்.

## மானிப்பாய்க்குப் பொலிஸ் நிலையம்

மானிப்பாயில் ஒரு பொலிஸ் நிலையம் ஏற்படுத்துதல் அத்தியாவசியகம் என்பதைமுன்னரும பன்முறை இத்தப் பத்திகளில் எழுதியுள்ளோம். இஃது இன்றியமையாது வேண்டப்படும் ஒன்று என்பது மேலும் மேலும் வலுப்பெற்று வருகின்றது. சின்னாட்களாக மானிப்பாயிலும் அதற்கு அடுத்த கிராமங்களிலும், வீடுகளுக்குட் புகுந்து திருடுதல், சாதாரண களவுகள், பலாத்காரச் செயல்கள், கலகங்கள் கொலைகள் ஆதியன மலிந்து வருகின்றன. இவற்றுள் திருட்டுகள் மிகமிக அதிகரித் திருக்கின்றன. துணையில்லாத ஏழைச் சனங்கள் சதா திகிலோடேயே வாழ்க்கை நடத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர். வீடுகளில் நகைகளையோ பிறவற்றையோ அச்சமின்றி வைக்க முடியாமல் இருக்கிறது. இவற்றுள் தாலிக்கொடித் திருட்டுகளே மிக அதிகமாக நடைபெறுகின்றன. ஒரு பெண்ணுக்குத் தாலி கண்ணிலும் உயிரிலும் பார்க்கச் சிறந்தது. ஆகவே இத்தகைய ஒரு அருமை வாய்ந்த மங்கலமான பொருளை இழந்து மாதர் சகித்திருக்க முடியாது. எனினும் இந்நிலைமை நீக்குதற்குரிய வழிவகைகள் கையாளப்பட்டில.

யாழ்ப்பாணத்தில் மீண்டும் கள்ளுத் தவறணைகள் திறக்கப் பட்டமையும் இத்தகைய குற்றங்கள் அதிகரித்தற்கு ஒரு காரணமாகும். பகலெல்லாம் மரியாதையுள்ளார் போல உடுத்துக் கொண்டு உலாவித்திரியும் சில காடையர் இரவெல்லாம வீடுகளில்திருடுவதையே தமது தொழிலாகக் கொண்டுள்ளார்கள். இதனல் எளிதில் வயிறு வளர்க்கக் கற்றுக் கொண்ட இத் துஷ்டர்கள் பகலில் உளவறிவதிற் காலங் கழிப்பர். இவர்களை அடக்குதற்கு விதானைமாராலும் முடியாமல் இருக்கின்றது. ஆடவர் இல்லாத வீடுகளில் இவர்கள் துணிவுடன் நுழைந்து பலாக்காரங்களை வெட்டிக் கொண்டுபோயும், வேறு பொருள்களைத் திருடியும் வருஞ் செயல்கள் சர்வசாதாரணமாய் விட்டன. அவ் வீடுகளில் உள்ள பெண்கள் சில வேளைகளில் இவர்களைக் கண்டாலும், உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற அச்சத்தினல், வாளா இருந்து விடுகின்றனர். இத்தகைய சம்பவங்கள் பல இங்கு நடைபெற்றிருக்கின்றன. எனினும் அதைச் செய்தோர்மீது வழக்குத் தொடரப்படவுமில்லை. அவர்களுக் குத்தண்டனை விதிக்கப்படவுமில்லை. சிலவிடங்களில் இரவில் மறைந்திருந்து வீட்டுக்குத் தீயிடுதல் முதலிய பாதகச் செயல்களும் இடையிடையே நடைபெறுகின்றன.

மானிப்பாய் ஒரு முக்கியமான இடம். அதினும், மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சை பெறுவதற்காக வரும் ஜனங்களோ மிக அதிகம். ஆகவே ஆஸ்பத்திரிக் கருகாமையிலேயே இக்காடையரும் பலர் கூடுகின்றனர். சீட்டாடுதல், கள் முதலிய குடிவகைகளை அருந்துதல் களியாட்டயர்தல் முதலியவற்றிலேயே இவர்கள் காலங் கழிக்கின்றனர். இவர்களால் காலத்துக்குக் காலம் ஏற்படும் கலகங்களோ அளப்பில. அவற்றுட் சிலவற்றில் கத்திக் குத்துகளும் கொலைகளும் கூட நடைபெறுகின்றன. இதனல் ஆஸ்பத்திரிக்குச் சிகிச்சை பெற வரும ஜனங்கள் அச்சமின்றிப் போக்குவரவு செய்ய முடியாமல் இருக்கின்றது. இவர்களிற் பலர் பல சாமான்களை இழக்க வேண்டி நேரிடுகின்றது. இவ்வாறு பல்லாற்றானும் பொதுஜனங்களை இமிசித்து வரும் இக் காடையருக்குச் சில விதானைமாரும் உதவி புரிந்து வருவதாகக் கூறப்படுகிறது. வேலியே பயிரை மேய்ந்தவாறு போல இவர்களே பொதுஜன அமைதியீனத்திற்குக் காரணராயின், ஏழைச் சனங்களின் கதி அதோகதியன்றோ? அதிகாரிகள் இதன் மீது கருத்துச் செலுத்தாமல் வாளா விருத்தல்ஒருபோதும் நீதியாகாது. யாழ்ப்பாணத்திலிருந்து காரைநகர் வரையுள்ள இடங்களுக்கு மானிப்பாய் ஓர் மத்தியஸ்தானமாகவும் ஒரு முக்கிய ஸ்தலமாகவும் இருத்தலினலும், மேற்கூறிய பற்பல குற்றங்கள் மலிந்திருத்தலாலும் ஏனைய பிற காரணங்களாலும் இங்கு ஒரு பொலிஸ் நிலையம் நிறுவப்படுதல் மிக மிக இன்றியமையாதது என்பதை எடுத்து இடித்துக் கூறுவதில் நாம் தளர்ச்சி யடையோம். நாட்டின் நன்மையையும் தமது நல்ல பேரையும் காப்பாற்ற விரும்பின், அரசாங்கத்தார் இதிற் கருத்துச் செலுத்துவாரென நாம் நம்புகின்றோம்..

## 6 குழந்தைகள் பெற்றவள்மீது மோகம்

### கருருக்கருகில் கோரமான கொலையும் தற்கொலையும்

கருர் ஆக. 14—

9-8-36ல் கருருக்கு அடுத்த 6வது மைலில் வெங்கல் கிராமத்தில் சோத்கன் சேர்வை பெண்ஜாதி பட்டாயம்மாள் அன்று மாலை 6-மணிக்கு வாழைத்தோட்டத்துக் போயிருக்கும் சமயம் மேற்படி பட்டாயம்மாளுடைய கொழுந்தனர் மாரியப்ப சேர்வை சுதி மாய்க் குடித்துவிட்டு மேற்படி வாழைத்தோட்டத்துக்குப் போய்த் தன்னுடைய அண்ணன் சம்சாரத்தைத் தன்னுடைய இஷ்டத்துக்கு இணங்கும்படி வற்புறுத்தினுரென்றும், மேற்படி பட்டாயம்மாள் அதற்கு மறுக்கவே மாரியப்ப சேர்வை கோபவெறியால் தன் கையிலிருந்த கொடுவாளினல் மேற்படி பட்டாயம்மாளை 4, 5, வெட்டுகள் வெட்டியதாகவும், உடனே அவள் இறந்துவிட்டாள். இரவு 9-மணிவரையில் பட்டாயம்மாள் வீடு வாராமலிருக்கப் புருஷன் அவளைத் தேடிப்பார்க்கப் வயக்காட்டில் வெட்டுப்பட்டுக் கிடப்பதைப் பார்த்துக் கிராமமுனிசீப்புக்குத் தெரியப்படுத்திப் பிரேதத்தை வீடுகொண்டு வந்து சேர்த்தாராம். மாரியப்பன் சேர்வை வீடு திரும்பியதும் தூக்குப் போட்டுக்கொண்டு தற்கொலை செய்துகொண்டிருந்தான். போலீஸார் இரண்டு பிரேதங்களையும் பிரேத பரிசோதனை செய்தனர் கொலைசெய்தவன் தற்கொலை செய்துகொண்டதினல் வழக்கிற்குச் சரியான ஆதாரம் இல்லை. கொலைசெய்யப்பட்ட பட்டாயம்மாளுக்குவயதுசுமார் 35 இருக்கும். 6 குழந்தைகளுமிருக்கின்றன.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முதன்மை

### 1935-ம் ஆண்டு ஜூனியர்ப் பரீக்ஷையின்சித்தி விவரங்கள்

சமீபத்திற் கல்விப் பகுதியாரால் தயாரிக்கப்பட்ட ஓர் அறிக்கையின்படி, 1935ம் ஆண்டு நடை பெற்ற கேம்பிரிட்ஜ் ஜூனியர் பரீக்ஷையில் வட இலங்கையில் மாணவர்கள் மிக அதிகமான விதமாகச் சித்தி பெற்ற இரு கல்லூரிகள் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியுமாகும். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலிருந்து 39 மாணவர்கள் பரீக்ஷை எடுத்தனர். இவர்களில் நூற்றுக்கு 69 வீதப் பேர் சித்திபெய்தினர். விக்ரோறியாக் கல்லூரியிலிருந்து 16 மாணவர்கள் பரீக்ஷை எடுத்தனர். இவர்களில் 100 க்கு 69 விதம் பேர் சித்தியெய்தினர். இவ் இரு இந்துக்கல்லூரிகளும் மாணவர் சித்தி வீதத்தில் முதன்மையடைந்தமை குறிப்பிடத்தக்கது. அடுத்தபடியான வீதத்தோடு சித்தியெய்திய கல்லூரியும் ஓர் இந்துக் கல்லூரியேயாம். இது மானிப்பாய் இந்துக் கல்லூரியாகும் இக் கல்லூரியிலிருந்து 19 மாணவர் பரீக்ஷை எடுத்தனர். இவர்களில் 100க்கு 63 வீதப்பேர் சித்தியெய்தினர்.

வித்தியா பகுதித் தலைவர் வெளியிட்டுள்ள வித விபரங்கள் வருமாறு:

| கல்லூரி | மாணவர் தொகை | விதங்கள் 100க்கு |
|---|---|---|
| சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி | 16 | 69 |
| யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி | 27 | 48 |
| யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 39 | 69 |
| பரமேஸ்வரக் கல்லூரி | 34 | 59 |
| சென்ஜோன்ஸ் கல்லூரி | 51 | 59 |
| சென்பட்ரிக்ஸ் கல்லூரி | 119 | 38 |
| ஹாட்லிக் கல்லூரி | 34 | 24 |
| யாழ்ப்பாணக் கல்லூரி | 25 | 52 |
| மானிப்பாய் இந்துக் கல்லூரி | 19 | 63 |

## தேரின் சக்கரத்தில் மனிதன் தவறு

### முட்டுக்கட்டை கொடுத்தவன் உயிர் பலி

புதுச்சேரி ஆக 14—

புதுச்சேரிக்கடுத்த வீராம்பட்டணம் என்ற ஊரில் இன்று செங்கேணியம்மன் தேரின் சக்கரத்தில் ஒருவன் தலை அறைபட்டு இறந்தான்,

மேற்படியூரில் வருஷத்தோறும் பிரபலரதோற்சவம் ஆடிமாதம் நடைபெறுவது வழக்கம். இவ்வுற்சவத்திற்குப் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஜனங்கள் ஆயிரக்கணக்கானவர்கள் வருவார்கள். ரதத்திற்கு முட்டுக்கட்டை கொடுப்போனுகிய 50 வயதுடைய குட்டியாண்டி என்பவன் ரதத்தை நேரே திருப்புவதற்காகக் கட்டையை உபயோகப்படுத்தும் போது அவனது கரம் சக்கரத்தில் சிக்கியதும் அவன் கீழே விழச் சிக்கிச் சக்கரம் ஏறி அறைபட்டு அந்த இடத்திலேயே உயிர்துறந்தான். அவன் மண்டை நொறுங்கிவிட்டது.

## அரிசி விலை உயருமா?

—0—

### புகையூட்டும் திட்டத்தின் விளைவு

## பிளேக் தடை வேலை

### இந்திய வியாபாரிகளின் அறிக்கை

இந்நாட்டில் இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கும் மற்றத் தானியங்களுக்கும இனிமேல் புகையூட்டப்படும். இதற்காகப் பிரத்தியேகக் கட்டணம வசூலிக்கப்படும். இதன் பலனாக ஏற்படக்கூடிய சேதத்தை முன்னிட்டு இன்ஷூரன்ஸ் விகிதமும உயர்த்தப்படும். இவைகளின் பலனுக பொது ஜனங்களின் முக்கியமான உணவுப் பொருளாக இருக்கும அரிசியின் விலை உயர்ந்துவிடுமோ என்ற பயத்தினல் பிளேக் தடை வேலையாக செப்டெம்பர் முதல் இந்தியாவிலிருந்தும் பர்மாவிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் எல்லாத் தானியங்களும புகையூட்டப்பட வேண்டும என்ற விதிக்கு ஆட்சேபமேற்பட்டிருக்கிறது.

முதலில கப்பல்களிலே இந்தப் புகையூட்டும் வேலையைச் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. இதனல் மிகுந்த காலதாமதம் ஏற்படுமென்று கப்பல் கம்பெனிக்காரர்கள விண்ணப்பம் செய்துகொண்டதன் பேரில் மூட்டைகளைக் கப்பலிலிருந்து படகுகளில் இறக்கிய பின் புகையூட்டக்கூடுமோவென்று சோதனை செய்யப்பட்டது. இந்தச் சோதனை வெற்றிகரமாக முடிந்திருப்பதால் படகுகளிலே புகையூட்டுவதென்று பின்னர் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

புகையூட்டுவதற்குரிய கட்டணமும படகுகளில் புகையூட்டுவதினல் ஏற்படும் அதிகப்படி இன்ஷூரன்ஸ் செலவும் சேர்ந்து சரக்குக் கரை வந்து சேரும்பொழுது அதன் விலையை அதிகமாக்கிவிடுமென்றும் இதனல் சில்லரை வியாபாரிகள பொது ஜனங்களுக்குக் கூடுதலான விலைக்கு விற்கும்படி நேரிடுமென்றும் இந்திய அரிசி வியாபாரிகள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர்.

தாராதாரப்பத்திரங்கள்

மேலும் பர்மாவிலிருந்து டச்சுக் கிழக்கிந்தியத் தீவுகளுக்கு அனுப்பப்படும் அரிசி ஏற்றுமதித்துறையிலேயே புகையூட்டப்பட்டுத்தாராதாரப்பத்திரம் வழங்கப்படுகிறதென்று அந்தத் தாராதாரப்பத்திரம் இறக்குமதித் துறைமுகத்தில் அங்கீகரிக்கப்படுகிறதென்றும் இலங்கையிலும் இதே ஏற்பாட்டைக் கைக்கொள்ளலாமென்றும் அவர்கள் யோசனை கூறியிருக்கிறார்கள்.

ஆனல் பர்மாவில் கந்தகப் புகைதான் உபயோகிக்கப்படுகிறதென்றும் அது பிளேக் கிருமிகளைத் தடுக்கமுடியாதென்று சமீபத்தில கண்டுபிடிக்கப்பட்டிருப்பதால் கொழும்பில் உபயோகிக்கப்படும் ஸயனைட் புகை உபயோகிக்கப்பட்டதாக தாராதாரப்பத்திரம் பெற்று வந்தாலொழிய கொழும்பில் கண்டிப்பாகப் புகையூட்டப்படவேண்டுமென்றும் அதிகாரிகள் தெரிவித்துவிட்டார்கள்.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

இக்கல்லூரி நல்லூர்க் கந்தசுவாமி கோயில் விடுமுறை முடிந்தபின் நேற்றைத்தினம் (19-8-36) ஆரம்பித்திருக்கின்றது. இங்கே ஆண்டிற் கிருமுறை அதாவது ஜூன் மாசத்திலும நவம்பர் மாசத்திலும் ஆங்கில ஜெ. எஸ். ஸீ. வகுப்பு மாணக்கரைப் பரீட்சைக்கு அனுப்புதற்கான முறையில் கல்வி பயிற்றுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இக்கல்லூரிகளில் மாணவர்களின் தொகை அதிகப்பட்டு வருகின்றதென அறிய லாமேயா.

## 50 சத அபராதம்

### கோட்டில் எதிரியைப் பாராட்டிய நீதிபதி

விநோதமான செருப்படி விபரம்

வட்டுக்கோட்டை மேப்கைச் சேர்ந்தவரும் மலாய்நாட்டுப் பென்ஷனருமாகிய கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை என்னும் ஓர் வேளாளர்மீது அடிஷனல் போலிஸ் நீதிஸ்தலத்தில் ஓர் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில் எதிரி ஒரு நளவனைச் செருப்பாலும் தடியாலும் அடித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டார்.

வழக்காளியாகிய கே. அம்பலவன் என்பவன், எதிரி செருப்பணிந்துகொண்டு ஒழுங்கை வழியாக நடந்ததைக் கண்டு, "எப்போது தொடக்கம் நீர் செருப்புப் போடவும் குடைபிடிக்கவும் தொடங்கியிருக்கிறீர்?" என்று கூறினதாகத் தெரிகிறது. அதன்பேரில் எதிரிக்குக் கோபம் உண்டாகவே, அவர் நளவனைக் கையிலிருந்த தடியாலும் காலில் அணிந்த செருப்பாலும் அடித்ததாகக் கூறப்படுகிறது.

விசாரணையில், எதிரி தான் அடித்தது மெய்தானென்றும், வழக்காளி அவசியமற்ற வார்த்தைகளைக் கூறியதால் தனக்குக் கோபம் உண்டாயிற்றென்றும், அதன் பலனாகவே தான் அடித்ததாகவும் தெரிவித்தார்.

நீதிபதி எதிரி தைரியத்தோடு உண்மையைக் கூறியதுபற்றித் தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறி எதிரிக்கு 50 சத அபராதம் விதித்தார்.

## விஷங் கலந்த கள்ளு

### குடித்த இருவர் ஆஸ்பத்திரி சேர்ந்தனர்.

சென்ற வெள்ளிக்கிழமை யன்று இரண்டு மனிதர்கள் விஷமுள்ள வஸ்துவை உட்கொண்டு அவஸ்தைப்படுவதாகக் கொழும்பு பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டனர். அவர்கள் இருவரும் கள் குடித்த பிறது அவஸ்தை ஆரம்பமானதால் அந்தக் கள்ளில் விஷங் கலந்திருக்கப் படலாமென்று நம்பப்படுகிறது.

வத்துவை, போகதாமுல்லையில் சென்ற சில தினங்களாகத் தென்னை மரங்களில் உள்ள கள் முட்டிகளிலிருந்து கள் திருட்டுப் போய்க்கொண்டிருந்ததாம். மறுநாட் காலையில் கள் குறைந்து வந்ததாம். திருடர்களைக் கண்டு பிடிக்க இரவில் காவலிருந்தும் வேறுவழிகள் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை.

ஆகவே திருடர்களைக் கண்டுபிடிக்க ஒரு நூதன வழியாக யாரேனும் கள் முட்டிகளில் ஒரு விஷத்தைக் கலந்திருக்கக்கூடுமென்று நம்பப்படுகிறது. இம்மாதிரி மரத்திலிருந்து கள் திருடப்படும் ஊர்களில் முட்டியில் விஷம் கலந்திருக்கிறதென்ற வதந்தியைக் கிளப்பிவிட்டதால் பிறகு திருட்டு நின்றுவிடுவதுவழக்கமென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ரெயில்வே டிரைவர் பதவிகள்

### இலங்கையருக்களிக்க முடிவுகள்

கொழும்பு ஆகஸ்டு 19.

இலங்கை அரசாங்க ரெயில்வேப் பகுதியில் ஆறு எஞ்சின் டிரைவர்களை வெளிநாட்டிலிருந்து நிரந்தர வேலைக்காக எடுக்கவேண்டாமென்றும் அவர்கள் ஒப்பந்தம் முடிந்த பின் அவர்களை விலக்கிவிடத் தகுந்தபோல் அவர்களை எடுக்க வேண்டுமென்றும் அரசாங்கவேலைக் கமிஷனருக்குப் போக்குவரத்து மந்திரி சபை சிபார்சு செய்திருக்கிறது.

மேற்படி வேலையைத் திறமையுடன் பார்க்கக்கூடிய இலங்கையர்கள் இருப்பதால் சாசுவதவேலைக்கு வெளிநாட்டிலிருந்து எஞ்ஜின் டிரைவர்களை வருத்த வேண்டாமென்று போக்குவரத்து மந்திரிசபை கருதுகிறது. ஆனால் இந்த யோசனையைப் போக்குவரத்து மந்திரிசபை அங்கத்தவர்களான திரு. இ. வி. வில்டர்ஸ் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியவர்கள் ஆக்ஷேபித்தார்கள் என்று அறியப்படுகிறது.

## உலகம்பலவிதம்

கதிர்காமக் கந்தசுவாமி கோவில் மகோற்சவம் பூர்த்தியாகி மூன்று நான்கு நாட்கள் கழிந்துவிட்டன; நான் முன்னொரு சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்டிய விதமாக அந்த மகோற்சவ காலத்திலே சைவ பக்தர்களும் பல்லாயிரக்கணக்கானோர் சிவமயமாகவே காணப்பட்டனர்; இந்த விதமாக வருடம் 365 நாளும் இந்த யாழ்ப்பாணத்திலுள்ள சைவ மக்களனைவரும் ஒழுகுவதாலே எவ்வளவு அறிவுடையோரெல்லாருமாயிருப்பர் என்று நினைக்கலாம்; ஆனால் இப்பொழுது மக்களுடைய நிலையைப் பார்த்தால் அவர்கள் "பழமைக்கு நாகரிக மயக்க நிலை" என்ற நிலைமையிலே தான் காணப்படுகின்றனர்; பலர் 26 நாட்களும் அருச்சனையிலும் மற்றும் விசேஷ மதுபானம் என்னுமிவைகளை பழமைப்படி "பாக்கி" யில்லாமல் அருந்தத் தலைப்பட்டுக் கொண்டனர்; உண்டாட்டுக் களியாட்டில் அமர்த்திவைத்தனர்; இவர்கள் செயல் கழுவிக் கழுவிச் சேற்றில் மிதிப்பார் செயல்போற் காணப்படுகிறதே! ஆனாலும் இப்படி விசமனுட்டித்த ஆயிரக் கணக்கானோருள் ஒருவர் இருவராயினும் புலையுண்ணாமையை மதுவுந் தவிர்த்து வருடம் முழுவதும் சிறிய சிறிய நடத்தலையையும் இடையிடையே பார்த்துக் கேட்டுமிருக்கின்றேன்; அவர்கட்கும் ஏனையோர்க்கும் கந்தன் கருணை முன்னிற்பதாக.

*

சென்ற ஞாயிற்றுக் கிழமை (16-8-36) வெளிவந்த கொழும்பு "ஒப்ஸேர்வர்" என்னும் தினசரிப் பத்திரிகையில் கதிர்காம விஷயமாக மிஸ்டர் K. பாலசிங்கமவர்கள் எழுதிய வியாசமொன்று இற்றை இந்துசாதனப் பிரசுரத்திற் பிறிதோரிடத்திலே சுருக்கமாக மொழி பெயர்த்து வெளியிடப்பெற்றிருக்கிறது. கதிர்காமக்ஷேத்திர மொனறிலே மகோற்சவகாலத்தில் சைவர் பௌத்தர் இஸ்லாமானவர் கிறீஸ்துவரென்னும் நான்கு சமய வாதிகளும் சாதி வித்தியாசம் சமயபேதம் பாராட்டுதலின்றிச் சமரசமான வணக்கஞ் செய்கிறார்களென்னுங் கருத்துப்பட உரைத்துள்ளார். முதற்சொன்ன மூவகைச் சமயத்தினரும் அங்ஙனம் சமரச வழிபாடு செய்கின்றனரென மிஸ்டர் பாலசிங்கமவர்கள் உரைப்பது ஒருவாறு பொருந்தும் ஆனால் நான்காவதாகச் சொல்லப்பட்ட கிறீஸ்துவரும் அப்படியான வணக்கஞ் செய்கிறார்களென்பது ஆசங்கைக்கிடமாகும். சைவசமயம் ஏனைய சமயத்தவர்களுடைய வணக்கத்திறகும் இடங்கொடுக்கும்; கிறீஸ்துவர்கள் அப்படியான வணக்கஞ் செய்தற்கு உடன்படமாட்டார்களல்லரோ! "நட்டாலும் நண்பல்லார் நண்பலர்" என்பதை மிஸ்டர் பாலசிங்கமவர்கள் மறந்துவிட்டனர் போலும்.

## கம்பனி மனேஜரைப் பயமுறுத்தியதாக

### வழக்காளி சாக்ஷியம்

யாழ்ப்பாணம் செபமாதெருவில் டொமினிடன் டிரேடிங் கம்பனி மானேஜர் திரு. சின்னையா வென்பவர் அவ்வூர் சேனாதிராசாவும் நடராஜாவும் வேறு சில ஐவருமாகத் தனது கந்தோருக்கு ஆயுதங்களுடன் வந்து கணக்குப் புத்தகங்களை எடுத்து எறிந்து மானேஜரைக்கொல்லுவதாகப் பயமுறுத்தியும் நின்றதாகக் குற்றஞ்சாட்டி சென்ற 18-8-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் கோட்டில் ஒரு வழக்குத் தொடர்ந்தார்.

சின்னையாவாகிய வழக்காளி கூறிய சாட்சியமாவது:—

நான்தான் கம்பனி மானேஜர். சேனாதிராசாவும், நடராசாவும் எனது கம்பனியில் வேலை செய்தவர்கள். இப்போது அவர்கள் அங்கு வேலை செய்யவில்லை. சென்ற 13-ம் திகதி நான் கந்தோரில் இல்லாத நேரத்தில் அங்கு வந்து புத்தகங்களைச் சிதறியும் என்னைக் கொல்லுவதாகவும் கூறியதாகக் கந்தோர்ப்பியோன் கே. யோகநாதன் எனக்கு அறிவித்தான் என்று கூறினர்.

இதன்பின் யோகநாதன் சாட்சியங் கூறியபின் வழக்குத் தவணையிடப்பட்டது.

## கணவன் கொன்றுல் மோக்ஷம்

### 21வயது மாது 3துண்டமாக வெட்டப்பட்டாள்

லாகூர் ஆக 14—

இன்று நகரில் சவாலா மண்டியில் ஒரு ஜீவ தாருண்யக் கொலை நடந்தது. 5வருஷங்களாக க்ஷய ரோகத்தினால் கஷ்டப்பட்டு வந்த 21 வயதுள்ள சரஸ்வதி என்ற பெண் நேர் சிரவு நோய் உத்திரவால் ரோகச் சாட்டாமல் வியாதி காரணமாக இறக்கவில்லையென்றும் தன்னைத் தனது கணவனே கொன்றால் தனக்கு மோக்ஷம் சித்திக்குமென்றும் இதனால் தன்னைத் தனது கணவன் கொன்றுவிட வேண்டுமென்றும் மன்றாடி வேண்டிக்கொண்டாளாம். அவள் தன்னை நல்லுடைகளாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்துக்கொண்டு தனது மரணத்திற்குச் சித்தமானாள். அதன்மேல் அவளது துயரைப் போக்குவதற்காக அவளது கணவன் தனது பட்டாக்கத்தியைக் கொண்டு அதிகாலையில் மூன்று துண்டமாக வெட்டினான்.

சரஸ்வதியின் கணவனது பெயர் லக்ஷ்மி நாராயணன் என்பதாகும்; லக்ஷ்மி நாராயணன் ஜாங்கைச் சேர்ந்த பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவர். இங்கு வியாபாரம் செய்து வந்தார். அவர் தனது மாமனுருக்கு "துயரைப் போக்க மனைவியைக் கொன்றேன்" என்று தந்தி கொடுத்துவிட்டுத் தாமாகவே பொலிஸாரிடம் சென்று தம்மை ஒப்படைத்துக்கொண்டான்.

## இந்திய மகாராஜாவிற்கு ஹிட்லர் மரியாதை செய்தார்.

திப்பரா மகாராஜாவை ஆகஸ்ட் 5-ந் தேதி ஹேர் ஹிட்லர் தமது பேர்லின் விடுதியில் வரவேற்று 20 நிமிஷம் சம்பாஷித்துக்கொண்டிருந்ததாகவும், அப்போது சான்சலரது அரண்மனையில் மகாராஜாவுக்குத் துருப்புகள் அணிவகுத்து நின்று மரியாதை செய்தனவென்றும் இதர சம்பிரதாயமான மரியாதைகளும் செய்யப்பட்டனவென்றும் இந்தியாவுக்கு ஆகாயத்தபாலில் செய்திகிடைத்திருக்கிறது.

## வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலை

வட்டுக்கோட்டைச் சைவாங்கில வித்தியாசாலைக் கட்டிடத்திற்காகப் பணஞ் சேர்ப்பதற்கென நியமிக்கப்பட்ட திருவாக சபையாராகிய திரு. சபாரத்தினசிங்கி அவர்கள் திரு. க. சோமசுந்தரப்புலவர், திரு. நில்லைநாதன் அவர்கள் ஆகியோர் அங்கோக்கமாக இன்று கொழும்புக்குப் புறப்பட்டிருக்கிறார்கள்.

## திருக்கோணமலையில் 4 வீடுகள் தகனம்

### காற்றினுல் தீப்பொறிகள்பறந்து சேதம் அதிகரித்தது

திருக்கோணமலை, ஆகஸ்ட் 16

திருக்கோணமலையைச் சேர்ந்த உப்பு வெளியில் இன்று பிற்பகல் 4 வீடுகள் தீப்பற்றி எரிந்துவிட்டன தீ எரிய ஆரம்பித்ததும் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. அவர்கள் உடனே ஒரு நெருப்பணைக்கும் யந்திரத்துடன் அவ்விடத்திற்கு வந்தார்கள். காற்று மிகப் பலமாகஅடித்ததால் அவர்களுடைய வேலை பிரயோசனமற்றதாயிற்று.

எரிந்துகொண்டிருந்த 2 வீடுகளிலிருந்து தீப்பொறிகளைக் காற்று 50 செஜ தூரத்திலுள்ள 2 வீடுகளுக்குக் கொண்டுசென்றது. ஆகவே 4 வீடுகளும் சாம்பலாய்த் தகனிக்கப்பட்டன எவருக்கும் காயம் ஏற்படவில்லை. ஆனால் தீவிபத்தால் ஏற்பட்ட சேதம் ரூபா 500 என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## தேகவியோகம்.

திரு. கே. கனகசபை.

அனுவில் வாசரும், இந்துசாதனக் காரியாலயத்திற் சிறப்பாக வேலை பார்க்கும் திரு. விசுவலிங்கத்தின் தந்தையாரும், பிரபல வியாபாரியும் கமக்காரருமாகிய திரு. கே. கனகசபை அவர்கள் நேற்று மானிப்பாய் ஆஸ்பத்திரியில் தேகவியோகமாயினர். இறக்கும்போது இவருக்கு வயது 85. இவர் ஏனையவர்களுக்குப் பெரிதும் உபகாரமாக இருந்தவரென்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

திரு. கார்த்திகேசர்—தாமோதரம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சித்திராசிரியராகச் சென்ற 14 வருட காலம் அதிக திறமையுடன் கடமை பார்த்து வந்த சிவியாதெரு ஸ்ரீ கார்த்திகேசர் தாமோதரமவர்கள், இந்த ஆகஸ்ட்மீ 10உ திங்கட்கிழமை பின்னேரம் 4 மணி வரையில் கொழும்பு கொம்பனித் தெருவிலுள்ள டக்டர் இரத்தினமவர்களின் வைத்தியசாலையில், தம்மைப் பீடித்த சுவாத நோய் காரணமாக அகாலமரணமடைந்தனர். இவருடைய பிரேதம் அடுத்த நாளாகிய செவ்வாய்க்கிழமை காலை மோட்டார் மூலமாக யாழ்ப்பாணத்துள்ள அவரது இல்லத்திற்குக் கொண்டுவரப்பட்டது. இங்கே குறித்த ஆசிரியருடைய மனைவி மக்கள் நெருங்கிய சுற்றத்தினர் சுற்றமித்திரர் ஆசிரியர் மாணுக்கர் முதலிய எல்லோருந் துக்கங் கொண்டாடியபின் முத்தமகன் சமக்கிரியை செய்ய சித்துப்பாத்திமயானத்தில் தகனம் நடந்தது. இவ்வாசிரியருடைய மரணம் மிகவும் பரிதாபப்படத்தக்கது. இவர் தமது மனைவிமக்களிருவருடன் கதிர்காம யாத்திரை செய்யும்படி புறப்பட்டுப் போய் கதிர்காம வேலவர் தரிசனம் மாணிக்ககங்கை ஸ்நாநம் என்னுமிவைகளையும் முடித்துக்கொண்டு மீண்டுவருமார்க்கத்தில் நோய்கண்டு கொழும்பிலுள்ள இரத்தினம் வைத்தியசாலையிற் சிகிச்சை செய்யப்பெற்ற விடத்திற்றன் தம்மைப் பீடித்த நோய்க்கு இரையானார். இறக்கும்போது வயசு 38. முறையே 7 வயசும் 2 வயசுமுள்ள அருளம்பலம், சோமசேகரம் என்னும் இரு சிறுவர்கள் உளர்.

ஸ்ரீ தாமோதரமவர்கள் சித்திரக்கலையில் மிகவும் திறமை வாய்ந்தவர்; சித்திரம் எழுதுவதோடு மாத்திரம் அமையாது சுதைவேலை, வாகனவேலை, நாடகத்திற் றுரியதிரைவேலை, ஒருவரை அவதானித்து அந்தப்படியே அவருடைய சாயலைக் கீறுந்திறமை முதலிய எல்லாவற்றிலும் கைதேர்ந்தவர். சில வருடங்கட்கு முன்னர் யாழ்ப்பாணத்திலே நடத்தப்பட்ட சித்திரம் வரைதற் பரீட்சையில் "இடபாருடர்" சித்திரத்தை வரைந்தனுப்பி அதுவாயிலாக முதலாம் பரிசு பெற்றவர்.

இவை மாத்திரமல்லாமல் நமது சைவ பரிபாலனசபையார் வெளியிட்டிருக்கும் பாலபாடங்களிற் சேர்க்கும்படி பல அரிய இன்றியமையாத சித்திரங்களை யாதும் கிரயம் பெறுதலின்றி, குறிப்பின் வழி சித்திரித்து உதவியவர்; இவர் சாந்தகுணம் பெருந்தன்மை ஹாஸிய ரசம்படப் பேசுதல் முதலிய சுகுணங்களுஞ் செயலும் இயல்பாகவே உடையவர்; இந்துள்ள சித்திரப் பரிசோதகராயுள்ளவர் ஸ்ரீ தாமோதரமவர்களின் திறமையைப்பற்றியும் அதனுல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர் அடைந்த பேற்றைப்பற்றியும் பெரிதும் வியந்து பேசியுள்ளனரென அறியலானேம்; இவருடைய மரணத்தினுல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாத்திரமன்றி வட இலங்கையிலுள்ள சித்திரப் பயிற்சிக்கும் பெருங்குறைவு நேர்தலாயிற்றென்பதே எமது அபிப்பிராயம்; இவருடைய அகால மரணம் பெரிதும் பரிதாபமானதாகும்!

## களவாக'டிக்கற்'விற்றேருக்கு 5ரூபா அபராதம்

சென்ற 18-8-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் சின்னத்துரை காளிதாசர் என்பவர் யாழ்ப்பாணம் றெயிலடியிற் களவாக டிக்கற் விற்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார் நீதிபதி எதிரிக்கு 5 ரூபா அபராதம் விதித்தார். பணம் கட்டத்தவறினுல் 1 கிழமை மறியல் இருக்கவேண்டுமென்றும் தீர்க்கப்பட்டது.

## யாழ்ப்பாண நகரசபை

### மின்சாரத் திட்டம்

யாழ்ப்பாணம், ஆக 16—

யாழ்ப்பாண நகர சபையின் விசேஷக் கூட்டமொன்று சமீபத்தில் நடைபெற்றபோது யாழ்ப்பாணமின்சாரத் திட்டத்தைப் பெரிதாக்குவது சம்பந்தமான விவாதம் நடைபெற்றது.

நகரசபை அழைப்பின் பேரில் மின்சார இஞ்சினியர் திரு. ச. ஏ. பெர்னுண்டோ ஆஜராகியிருந்தார்.

பல அங்கத்தினர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் திரு. பெர்னுண்டோ புதிய இஞ்ஜின் (250 கிலோ வேட்கள் உள்ளது) எல்லா ரஸ்தாக்களிலும், வீடுகளிலும் விளக்குகள் போடுவதற்கு மின்சாரம் அளிக்க வல்லமையுடையதாக விருக்குமெனக் குறிப்பிட்டார்.

மின்சார திட்டத்தை அதிகப்படுத்துவதற்கும் புதிய இஞ்ஜின் வாங்குவதற்கும் 3 லக்ஷம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. திரு பெர்னுண்டோ இன்னும் ஒரு வாரத்தில் விபரமான திட்டமொன்றைத் தலைவருக்கு அனுப்புவதாகத் தெரிவித்தார்.

முதலில் நகரசபை இரண்டு லக்ஷ ரூபாய் கடன் கேட்கத் தீர்மானித்திருந்தது. பின்னர் மின்சார வேலை டைரக்டர் சமர்ப்பித்த திட்டத்தின் பேரில் நகரசபை மேற்கொண்டு ரூபாய் 40,000 கடன்வாங்கத்தீர்மானித்தது இப்போது நகரசபை ரூபா 3 லக்ஷம் கடன் கேட்கும்.

## முகாந்திரம் கந்தையா அவர்கள்.

முகாந்திரம் திரு. எஸ் கந்தையா அவர்கள் இன்று மாலை சென்னைக்குப் புறப்படுகின்றுர்.

## குருவி பிடுங்கிய தாடி.

ஜான் குவாலன் என்ற நடிகர், 'நாட்டு வைத்தியன்' என்ற படத்திற்காகத் தன் வீட்டிலிருந்து வேஷம் போட்டுக்கொண்டு ஸ்டுடியோவைப் பார்த்து நடந்து கொண்டிருந்தார். அப்போது பக்கத்து மரமொன்றிலிருந்த ஒரு கருங்குருவி திடீரெனப் பறந்துவந்து அவரது தாடியைப் பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டது. நடிகர் திகைத்துக் குழம்பிப் போனர். உடனே சில வேலைக்காரர்களை அழைத்து ஏணிமூலம் மரத்தைத் தேடிப் பார்க்க, அந்த தாடியால் குருவி ஓர் கூடுகட்டியிருந்ததாம்.

## காந்திஜி-கமிட்டி சந்திப்பு

### இராஜகோபாலாச்சாரியார் ராஜிநாமா

டம்ராய், ஆக. 18

காங்கிரஸ் மகாசபைத் தலைவர் ஸ்ரீஜத் ஜவஹர்லால்நேரு அகில இந்திய காங்கிரஸ் பார்லிமெண்டரிக் கமிட்டியின் கூட்டு தொதுக காரியதரிசி ஸ்ரீஜத் ராஜேந்திர பிரசாத், ஸ்ரீஜத் ஸி. ராஜகோபாலாச்சாரியார் ஆகியோர்களும் மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களும் மகாத்மா காந்தியடிகளை வார்தாவில் சந்தித்துப் பல முக்கியமான விஷயங்களைப் பற்றி பேசுவார்களென்றும் அப்பொழுது ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார் தமது பதவிகளை யெல்லாம் ராஜிநாமாச் செய்துவிட்ட விஷயமும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும் ஏற்கெனவே ஒரு தந்திச்செய்தி பிரசுரமாகியிருந்தது.

ஸ்ரீஜத் ராஜகோபாலாச்சாரியார் தமது பதவிகளையெல்லாம் அவசரப்பட்டு ராஜிநாமாச் செய்துவிட்டாரென்றும் அவர் தமது தீர்மானத்தை மறுபடியும் புனராலோசனை செய்ய வேண்டுமென்றும் தலைவர் ஜவஹர்லால் தவரிடம் வற்புறுத்திக் கூறினர். ஆனுல் ராஜாஜி பிடிவாதமாகப் புனராலோசனைக்கு மறுத்து விட்டார் தவிர காந்திஜீயுடன் கலந்து ஆலோசனை செய்த பிறகே தமது பதவிகளை ராஜிநாமாச் செய்ததாகவும் அவர் கூறினர்.

# கல்வியங்காட்டுக் கத்திக்குத்து வழக்கு

## ஆஸ்பத்திரியில் நீதிபதி விசாரணை

## விசாரணையின் பின் கத்தி கழற்றப்பெற்றது

## மேல் விசாரணை ஆகஸ்டு மீ 20ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நல்லூரைச் சேர்ந்த கல்வியங்காட்டிலிருந்து செம்மணிக்குப் போகும் புதுரோட்டில் அவ்வூர்த் தடடார வகுப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி-தம்பிப்பிள்ளை என்பவர், அவ்வழியால் சென்ற தில்லையம்பலம்-இரத்தின மென்பவருக்கு ஓர் வில்லுக்கத்தியால் இடது பக்க மார்பிற் குத்திக் காயப்படுத்தியதாயும், இச்சம்பவம் சேர்ந்த கலகத்தின்போதே இரத்தினத்தின் சகோதரன் சதாசிவம் அங்கு வந்தபோது தம்பிப்பிள்ளையின் சகோதரன் சின்னத்துரை என்பவன் ஓர் வில்லுக்கத்தியால் அவனுடைய (சதாசிவத்தின்) இடதுபக்கத் தலையில் குத்தியதாயும் குற்றஞ்சாட்டிப் பொலிஸ் சப்இன்ஸ்பெக்டர் J. W. அட்டியக்கலை சென்ற 18-8-36 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் ஓர் வழக்குத் தொடுத்தார்.

இவ் வழக்கில் காயப்பட்டவர்கள் ஆஸ்பத்திரிச் சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டனர். ஆஸ்பத்திரியிலும் சதாசிவத்தின் தலையில் ஏற்றப்பட்ட கத்தியைக் கழற்றுவது நீதிபதிக்கு இக்காயக்காரன் திடீர் ஆபத்தானது எனப் பொலிசார் அறிவித்தனர். நீதிபதி ஆஸ்பத்திரிக்குச் சென்று விசாரணை நடத்தினர். விசாரணை நடந்த பின்புதான் கழற்றப் பட்டதாயும் அறிகிறோம்.

இவ் வழக்கில் குட்டிப்பிள்ளை-கார்த்திகேசு கூறியசாக்ஷியமாவது:

இன்று (18-8-36) காலை 4 அல்லது 4-30 மணியளவில் நான் எனது மகன் வீட்டிலிருந்து (கல்வியங்காட்டிலிருந்து செம்மணிக்குச் செல்லும்) புதுரோட்டால் சென்றேன். அப்போது எனக்கு முன்னால் இரத்தினம் சென்றான். இரத்தினம் தம்பிப்பிள்ளையின் வீட்டுப் படலைக்குக் கிட்டச் சென்றான். அங்கே தம்பிப்பிள்ளையும் சின்னத்துரையும் வேறு சிலருமாகக்கூடி நின்றனர். இவர்களுள் தம்பிப்பிள்ளையையும் சின்னத்துரையையும்தான் நான் குறிப்பிடக்கூடியதாய் இருந்தது. சின்னத்துரை இரத்தினத்துக்கு ஓர் பொல்லால் ஓங்கினர். இரத்தினம் அப்பொல்லைப் பிடித்தான். பொல்லைப் பிடித்தபடியே இருவரும் இழுபறிப்பட்டனர். தம்பிப்பிள்ளை ஓடிவந்து ஓர் வில்லுக்கத்தியால் இரத்தினத்தின் இடது மார்பிற் குத்தினன்.

இதைக் கண்டதும் நான் சத்தமிட்டேன். என் சத்தத்தைக்கேட்டுச் சதாசிவம் ஏசிக்கொண்டு ஓடிவந்தான். அங்கு நின்றவர்களில் ஒருவன் ஓர் பொல்லாற் சதாசிவத்துக்கு அடித்தான். சதாசிவம் அப்பொல்லைப் பறித்து தம்பிப்பிள்ளைக்கு அடித்தான். யாரோ ஒருவன் ஓடிவந்து சதாசிவத்தைக் கட்டிப்பிடித்தான். சின்னத்துரை ஓர் வில்லுக்கத்தியால் இடது தலையிற் குத்தினன். அந்த இடத்திலேயே கத்தி கிடந்தது. நான் கார் பிடிப்பதற்காகச் சென்றுவிட்டேன் காரைப் பிடித்துவந்து சதாசிவம்; இரத்தினம், சின்னத்துரை ஆகியவர்களைப் பொலிசுக்கு ஏற்றிச் சென்றேன். இம் மூவரும் ஆஸ்பத்திரியில் இருக்கிறார்கள். சின்னத்துரைக்கு எப்படிக் காயம் ஏற்பட்டதென்பது எனக்குத் தெரியாது நான் பொலிசாருக்கு இச்சம்பவத்தைக் காலை 8-30 மணிவரையில் அறிவித்தேன்.

இதன்பின் குட்டிப்பிள்ளை-பொன்னையா, முருகன்—செல்லன்; ஆகியவர்கள் சாக்ஷியம் கூறியபின் ஓர் வில்லுக்கத்தி சப் இன்ஸ்பெக்டரால் கோட்டிற் சமர்ப்பிக்கப்பட்டது.

மேல் விசாரணை 20-8-36க்குத் தவணையிடப்பட்டது

## பாலர் பகுதி

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்டுக்கொண்டிருக்கும்போது தலசிப்பிள்ளை பைத்தியத்தினலே சாதகைதை அள்ளி இவருடைய இலையில் எறிந்துவிட்டான். அதற்காக அவன் மேற் கோபங்கொள்ளாது பொறுத்துக்கொண்டார். பின் ஒருநாள் யாழ்ப்பாண வித்தியாசாலையிலிருக்கும்போது கொஞ்சத்தூரத்துக்கப்பால் ஒரு வீடு எரிந்தது அப்பொழுது அவ்வழியாற்போனவர்களோடு இவர் தாமுமொருவராய்ப்போய்க் கூரையைப்பிடுங்கி நெருப்பை அவித்தார். ஆனாலும் இவருக்கு இதிலும் பார்க்க இன்னும் மேன்மையான குணங்களுண்டு.

இவருடைய சிவபதப்பேறு

பிரமாதி ஸ்ரீ ஆடி மீ சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினமன்று இவர் செய்த பிரசங்கத்தைப் பற்றி முன் அறிந்திருக்கிறோம். இவர் வாக்கில் வந்தபடியே அதன்பின் இவரால் பிரசங்கங்கள் செய்யப்படவில்லை. அடுத்த கார்த்திகை மாதத்திற் சிவபதமடைய ஒரு வாரத்திற்கு முன் ஒருவரை நோக்கி காலைக்கு உதயத்தில் வா. சில விஷயங்கள் எழுதவேண்டும் என்றார் அவ்வாறே மற்றவர் போயினார் அப்பொழுது அங்குமிங்கும் உலாவி உலாவி

'அல்லிக்கமலத்தயனுமாலுமல்லாதே ஒருமமரர் கோனுஞ்
சொல்லிக் கனியைத் தேனைப்பால் கிறையின் அமுதை அமுதின்சுவையை
"புல்லிப் புணர்வதென்று கொல்லோ என் பொல்லாமணியைப் புணர்ந்தே
என்று பாடிக்கொண்டு இருக்கும்போதே இவருக்கு நோயுண்டானது அதற்கு ஒருவாரத்தின்பின் இவர் இறந்துபோனார்.

எங்கள் தாய்நாடாகிய இலங்கைத்தீவில் இவரைப்போன்ற இன்னொருவரிருப்பாரோ என்று எண்ணுகிறேன்.

இங்ஙனம்,
தங்கள் மருகர்
பொ. கடேயர்.

### செம்மாதெருவிற் சண்டை

சென்ற 16-7-36ல் யாழ்ப்பாணம் செம்மாதெருவில் கிருஷ்ணமூர்த்தி என்னும் கார்க்கிளீனர் ஒருவனைக் கையால் அடித்துப் படுகாயப்படுத்தியதாக மகோனவைச் சேர்ந்த சின்னத்துரை என்பவன் குற்றஞ்சாட்டப்பட்டான், எதிரி தான் குற்றவாளி அல்லவெனக் கூறினன் நீதிபதி எதிரியை 100 ரூபா பிணையில் விட்டு வழக்கை 15-9-36க்குத் தவணையிட்டார்.

### முழங்காலை முறித்ததாக வழக்கு

சென்ற செவ்வாய்க்கிழமையாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் இராமு சண்முகம் என்பவர் நீராவியடியில் வசிக்கும் நாகமுத்து சுப்பிரமணியமென்பவரை அடித்து முழங்காலை முறித்ததாகப் பொலிஸ் உதவிப்பரிசோதகர் W. C. ராஜப் என்பவரால் குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்பட்டது. எதிரிக்கு வாறண்டு விடப்பட்டிருந்தது. எதிரி இன்று பொலிஸ்கோட்டில் வெளிப்பட்டார். எதிரியை 200ரூபா பிணையில் விட்டு வருகிற 8-9-36க்கு வரும்படி கூறி நீதிபதி வழக்கைத் தவணையிட்டார்.

## மானிப்பாய்க் கத்திக் குத்து வழக்கு

எதிரிக்கு ஆறுமாதம்

சென்ற 13-8-36 வியாழக்கிழமை மானிப்பாயில் வசிக்கும் முருகேசு நாகலிங்கம் என்பவன் அவ்வூர் ஆஸ்பத்திரிக்கு முன்னுற் கடைவைத்திருக்கும் P. கோபாலுப்பிள்ளை என்பவருக்குக் கத்தியாற் குத்திக் காயம் வருவித்ததாக அவ்வூர்ப் பொலிஸ்விதானை ப. சக்கையாவால் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 6 மாத மறியல் தீர்க்கப்பட்டது.

## விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டிலே 7842ம் இலக்க ஈட்டு வழக்கின் பேரால் 1935ம் ஆண்டு கார்த்திகைமீ 28ந் திகதியைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் காணிகள் 1936ம் ஆண்டு புரட்டாதி மாதம் 12ம் தேதி சனிக்கிழமை சொல்லப்பட்ட காணிகளுக்குள் நின்று பிற்பகல் 3 மணிக்கு பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

எதிராளி வழக்காளிக்குக் கொடுக்கவேண்டிய தொகையின் விபரம் ரூபா 1185·81ம் 3—4—35 துவக்கம் இறக்கும் வரைக்கும் வருஷமொன்றுக்கு 100க்கு 9 வீதம் வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 118-55

வண்மேற்கு வழக்காளி C. S. K. சக்கையாச் செட்டியார்

Vs.

மன்னார் எருக்கலம்பிட்டி அல்லாப்பிச்சை நாகூரான் —எதிராளி

வடமாகாணம் மன்னூற்பிரிவு மன்னார் கிழக்கைச் சேர்ந்த எருக்கலம் பிட்டியில் குஞ்சப்பலை தென்னந்தோட்டம் கிழக்கிருந்து மேற்கு 100 யார் வடக்கிருந்து தெற்கு 75 யார் எல்லைகிழக்கு வளியும், வடக்குமீருசயிபு பிச்சைத்தம்பி மரைக்காயரின் ஆதனமும் வி முகம்மது காசிமின் ஆதனமும், மேற்கு அடம்லெவ்வை மீருலெவ்வையினதும் பங்காளருக்குமுடைய வாதனம் தெற்கு மெடிஹீன் சப்புடையாசெயதுவின் ஆதனம், இதில் சொரியலாய் ஐந்தில் நாறுபங்கு

2. ஷ மன்னார் மேற்குக்குச் சேர்ந்த சறுப்பன் குடியிருப்பில் குடியிலக் காணி கிழக்குப் பக்கம் நீளம் 60 யார், மேற்கு நீளம் 60யார் வடக்கு 37யார், தெற்கு 37யாரில் தென்னை மரங்களும், எல்லை கிழக்கு நாகூறன் சப்பனேயன் மரைக்காயரின் ஆதனம், வடக்கு செயத்துக்காசிம் மரைக்காயர் முகமது உசன் ஆதனம், மேற்கு வாப்பாமரைக்காயர் முகம்மது காதரின் பங்காளரின் ஆதனம், தெற்கு கவீரியல் பெண் மரியம்மாவினதும் மற்றவர்களின் ஆதனம்.

3. ஷ சறுப்பன் குடியிருப்பில் வளவாடி தென்னந்தோட்டம் கிழக்கிருந்து மேற்கு 60 யார், வடக்கிருந்து தெற்கு 60யார் எல்லை கிழக்கு ஆசயிறு சித்தறு முகம்மதினுடைய ஆதனம், வடக்கு பிலிப்புலோறனக்கும் பங்காளருக்குமுடைய ஆதனமும், வெறுங்கரையும் மேற்கு காலஞ்சென்ற யேசுதாசன் சந்தியாகனின் உரித்தாளருடைய ஆதனம், தெற்கு சப்பனயிறு மரைக்காயர் கைம்பெண் முகமதுசெலாயவினது பங்காளருக்குமுடைய வாதனமும் இதிற் சொரியலாய் அரைவாசி,

4. ஷ சறுப்பன் குடியிருப்பு இல்லாவடிச தென்னந்தோட்டம் கிழக்கிருந்து மேற்கு 62 யார் வடக்கிருந்து தெற்கு 60 யார் எல்லைகிழக்கு அந்தோனி கிறிஸ்தோ சற்குருசுவின் ஆதனம், வடக்கு நாகூறன்சப்பனேயிறுமரைக்காயரின் ஆதனம், மேற்கு என்தாவி பெதுறு சற்குருசும் மற்றவர்களினதும் ஆதனங்களும், தெற்கு பிலிப்பு லோறன்சும் பங்காளரும், வெறுங்கரையும் மற்றவர்களும், இதிற் சொரியலாய் அரைவாசி,

5. ஷ மன்னார் கிழக்கு, எருக்கலம் பிட்டியில் கொட்டைபவடி கிழக்கிருந்து மேற்கு 120 யார் வடக்கிருந்து தெற்கு 250 யார் எல்லைகிழக்கு மதனுசிபு மீருசாயிபு மற்றயவாகளின் ஆதனமும் வடக்கு எதிரிக்கும் பங்காளரின் ஆதனமும், மேற்கு முடிக்குரிய நிலம் தெற்கு காலஞ்சென்ற அபுபக்கர் லெவ்வை மீரு லெவ்வையின் உரித்தாளரின் பங்கும் இதில் சொரியலாய் கால்வாசி

6. ஷ மன்னார் மேற்கு உவரியிலில் மேற்கு வடியனக்தோட்டம் கிழக்கிருந்து மேற்கு 75 யார் வடக்கிருந்து தெற்கு 100யார் எல்லை கிழக்கு வடக்கு மேற்கு தெற்கு சப்பனயிறு மரைக்காயர் சயிபு முகமதுவும் பங்காளருக்குமுடைய வாதனம் இதிற் சொரியலாய் $\frac{3}{8}$ பங்கு,

7. ஷ எரிக்க கூடல்பவ வடித்தோட்டம் கிழக்கிருந்து மேற்கு 125 யார் வடக்கிருந்து தெற்கு 150 யார் எல்லைகிழக்கு பிலிப்பு சலமோன் சற்குருசும் பங்காளருக்குமுடையவாதனம் வடக்கு எதிரிக்கும் மற்றவர்களுக்குமுடையவாதனம் மேற்கு எ நாகூறனுக்கும் பங்காளருக்குமுடையதும் மற்றவர்களுக்குமுடையவாதனம் தெற்கு அசனு லெவ்வை கைம்பெண் ஆசநாச்சியாவின் ஆதனமும் பங்காளருக்குமுடைய ஆதனம் இதில் சொரியலாய் $\frac{3}{8}$ பங்கு.

8 ஷ சறுப்பன் குடியிருப்பில் பூச்சவடிக்காணி கிழக்கிலிருந்து மேற்கு 175 யார் வடக்கிலிருந்து தெற்கு 250 யார் எல்லை கிழக்கு புதுக்குடியிருப்பிலிருக்கும் பள்ளிவாசலுக்குச் சேர்ந்த தென்னந்தோட்டமும் அல்பிகாயி லெவ்வையினுதனமும் வடக்கு சப்பாயிறு மரைக்காயர் கைம்பெண் முகமது கலீச்சா உம்மாவினுதனமும் பங்காளருக்கும், மேற்கு சவிரியகோவினதும் பங்காளருக்குமுடைய வாதனம், தெற்கு நாகூறன் சப்பனயிறு மரைக்காயரினதும் மற்றவர்களினுதனமும்.

Mis 116 20-8-36. P. Rajaretnam
கொம்மிஷனர்

## ஸ்ரீ முன்னேஸ்வர மகோற்சவம்.

ஸ்ரீ முன்னேஸ்வர மஹா க்ஷேத்திரத்திலே திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் சர்வாபீஷ்டவரத ஸ்ரீவடிவாம்பிகாசமேத முன்னைநாதஸ்வாமிக்கு நிகழும் தாதுஸ்ரீ ஆடி மீ 22-ம் திகதி (6-8-36) வியாழக்கிழமை துவஜாரோஹணமாகி உற்சவங்கள் நடைபெறுமாதலால் நிவேசச் செல்வர்களனைவரும் வந்து தரிசித்துப் பேரானந்தப் பெருவாழ்வைப் பெற்றுய்வார்களாக.

பிக்ஷாடனர் திருவிழா ஆவணிமீ ௧௩-ம் திகதி (28-8 36) வெள்ளிக்கிழமை.

நடேசர் திருவிழா ஆவணிமீ ௧௪-ம் திகதி (29-8-36) சனிக்கிழமை

வேட்டைத்திருவிழா ஆவணிமீ ௧௫-ம் திகதி (30-8-36) ஞாயிற்றுக்கிழமை.

தேர்த்திருவிழா ஆவணிமீ ௧௬-ம் திகதி (31-8-36) திங்கட்கிழமை.

தீர்த்தத்திருவிழா ஆவணிமீ ௧௭-ம் திகதி (1-9-36) செவ்வாய்க்கிழமை

இங்ஙனம்
மு. சோமாஸ்கந்தக் குருக்கள்
ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான
ஆதீன பரிபாலன கர்த்தா

## பக்த - குசேல

தற்போது யாழ்ப்பாணம் ரீகல் தியேட்டரில் "பக்த-குசேல" என்னும் சிறந்த பக்திரசமான படம் காட்டப்பெற்று வருகின்றது. இப்படம் முதலிலிருந்து கடைசிவரையும் பக்திரசம் நிறைந்ததாய், இனிய சங்கீத கானம் பொழிவதாய், இடையிடையே கிருஷ்ணனது நகைச்சுவை நிறைந்த நடனங்களையுடையதாய் இருத்தல் குறிப்பிடத்தக்கது. குசேலரிஷியாக நடிக்கும் பபநாசம் சிவனது சங்கீதம் உருகாதாரையும் உருக்குந்தன்மையது. கிருஷ்ணனாக நடிக்கும் ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மியின் மனோதர்மமும் போற்றத்தக்கது. சிறப்பாக, பால்ய கிருஷ்ணனாக நடிக்கும் பால்லையின் நடனத்திறம் எவராலும் பாராட்டத்தக்கதாகும். சுருக்கச் சொல்லுமிடத்து, தமிழ்ப்பேசும் படங்களுள் கண்ணியமான எவரும் பார்த்து மகிழ்ந்து வக்கக்கூடிய படங்களில் "பக்த-குசேல" சிறப்பாகக் குறிப்பிடப்படவேண்டியதொன்றாகும், இதனைப் பார்த்தற்காகத் தினந்தோறும் அங்கு ஜனங்கள் குழுமுகின்றனர்.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்மேற்கு பெ. அரு. மு. சி. முத்துச்சாமி செட்டியார் அன் பிறதர் கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்.

1935-ம் ஆண்டு யேப்ரல் மாசம்

| நம். | ௳ | ரு | ஊரும் பெயரும் நகைகளின் விபரம் |
|---|---|---|---|
| 4875 | 5 | 17 | கரையூர் த ராசரெத்தினம் கல்தோடு சோடி 1 |
| 4894 | 6 | 40 | அச்சுவேலி பொ நவரெத்தினராசா மிளகுவளையல்காப்பு சோடி 1 |
| 5033 | 12 | 10 | உரும்பிராய் சி ஆபிரகாம் கல் காதுக்குச்சி 4 கல்தோடு சோ. 1 |
| 5272 | 27 | 160 | நீராவியடி மு சோமசுந்தரம் துண்டு2 கோர்த்த சாட்டுக்கோடி1 |
| 5303 | 28 | 9 | வண்கிழக்கு ந நடராசா கல்தோடு சோடி 1 |
| 5318 | 28 | 7 | உடுவில் அ அப்புபிள்ளை கல்டிம்மி பதைக்கம் 1 |
| 5323 | 29 | 50 | அராலிகிழக்கு ப கணபதிப்பிள்ளை சக்கிலி 1 |
| 5361 | 30 | 10 | நல்லூர் வே சுப்பையா மாங்காய் பொட்டு 1 |
| மே மாசம் | | | |
| 5469 | 5 | 8 | ஆனைப்பந்தியடி வே முருகன் கல் கட்டிய மோதிரம் 1 |
| 5481 | 6 | 10 | பொலிஸ்டேஷன் பொ வேலாயுதம் இமி கல் டிம்மி பதக்கம்1 |
| 5566 | 11 | 8 | நயினாதீவு சி வேலுப்பிள்ளை வெள்ளைக்கல் 2 வைத்த கடுக்கன் சோடி 1 |
| 5597 | 11 | 7 | நல்லூர் வ மயில்வாகனம் கல் கட்டிய மோதிரம் 1 |
| 5602 | 12 | 22 | நெல்லியடி ஆ ரெத்தினம் இமி கல் டிம்மி பதைக்கம் 1 |
| 5636 | 13 | 12 | வண்மேற்கு ம கந்தர் காப்பு முகப்பு 2 |
| 5657 | 14 | 17 | நீர்வேலி மி ஐயாத்துரை இமி கல் கவுத்தோர் 1 |
| 5662 | 14 | 15 | அளவெட்டி சி அப்பாப்பிள்ளை கல்வைத்த அக்ஷாக்கூடு 1 |
| 5675 | 15 | 250 | வண்மேற்கு பொ ராமநாதர் கல் பதைக்கத்துடன் கெட்டிப் பூரானட்டியல் 1 அச்சுக்காப்பு சோடி 1 கல்தோடு சோடி 1 |
| 5729 | 18 | 8 | கோப்பாய் நா வைரவி தாலி 1 |
| 5780 | 21 | 125 | வண்கிழக்கு சு சின்னராசா கல் பதைக்கத்துடன் கெட்டிப் பூரானட்டியல் 1 |
| 5790 | 21 | 10 | வண்கிழக்கு சு தம்பு கல்தோடு சோடி 1 |
| 5792 | 21 | 15 | ஷையூர் ந பொன்னுச்சாமிபத்தர் கயத்தில் கோர்த்த சலங்கை அட்டியல் 1 |
| 5817 | 22 | 9 | பெருமாள்கோவிலடி அ கண்ணையா கல்மோதிரம் 1 |
| 5825 | 22 | 25 | நல்லூர் க மு செல்லப்பா கல்காப்பு முகப்பு 2 மருக்கன் சிகப்புக்கல் பதைக்கம் 1 |
| 5859 | 24 | 7 | கந்தர்மடம் வ பொன்னு கிளாவர் கொண்டை ஊசி 1 |
| 5917 | 27 | 10 | வண்கிழக்கு நா வேலாயுதபிள்ளை சிகில் மோதிரம் 1 |
| 5944 | 28 | 15 | கொக்குவில் கா பொன்னுச்சாமி கல்தோடு சோடி 1 |

விற்பனவு தாதுஸ்ரீ ஆவணிமீ 20ந் திகதிக்குச் சரியான (4-9-36) வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் எடுபட்ட நகை புறநீங்கலாக மிகுதி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
வேந்திஸ்மேஸ்தர்.

(Mis. 117. 20, 24-8-36)

லிட்டில்ஸ் ஓரியண்டல்பாம்

எல்லா வலிப்புகளுக்கும் நோவுகளுக்கும்

பாரதநாட்டின்

முதன்மையானதும் சிறந்ததுமான

திவ்விய ஔஷதம்.

மிருகக் கொழுப்பு

கலக்கப்படவில்லை என்பதற்கு

உத்தரவாதம்.

44 1-1—31-12-36)

## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டசபைச் சட்டத்தின்படி அனுமதி பெற்று அடைவு பிடிக்கும் வண்ணை மேற்கு, சோனகதெரு சே. புண்ணியமூர்த்தி என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:-

1934ம் ஆண்டு 5ம் மாசம்

| நெ. | தி. | ரூ. | |
|---|---|---|---|
| 6 | 1 | 6 | க முருகேசு ஓட்டுமடம் ஒருசோடி இமிடேசன் ஓலை |
| 78 | 23 | 8 | சரவணமுத்து செல்லையா சண்டிலிப்பாய் கல் இல்லாத பொன் குலைக்கடுக்கன் இரண்டு |
| | | | 9ம் மாசம் |
| 738 | 13 | 20 | செ நமசிவாயம் மணிப்பாய் பொன் வட்டி மோதிரம் 1 |
| | | | 10ம் மாசம் |
| 933 | 24 | 10 | செ இராசு சமர்த்த சோனகதெரு ஒரு காசுடன் இ பொன் பணிக்கோர்வை ஒருபட்டு |
| 934 | 24 | 8 | ஈ கிசலவில்சபபதகர் வண்ணை இ வெள்ளைக்கல்லு விளக்குச் சீதனக் கடுக்கன் இரண்டு |
| | | | 11ம் மாசம் |
| 1004 | 10 | 26 | S A சமர்த்த சோனகதெரு பொன் கைச்சங்கிலி ஒன்று |
| | | | 12ம் மாசம் |
| 1166 | 19 | 17 | அ சுந்த புகழ்மது சோனகதெரு இ பொன் பொட்டு காறு, பொன் மணிக்கோர்வை ஒருபட்டு |
| 1209 | 30 | 15 | இ கந்தசாமி வண்ணை மேற்கு சதா செப்பு பொன் டிம்பி பதக்கம் ஒன்று |
| | | | 1935ம் ஆண்டு 3ம் மாசம் |
| 1499 | 15 | 10 | M சாகுல்கமீது சோனகதெரு பொன் குலைக்கடுக்கன் இரண்டு |
| | | | 4ம் மாசம் |
| 1573 | 18 | 53 | இ சுந்தரம் சோனகதெரு பொன் வளையல்காப்பு இரண்டு |
| | | | 6ம் மாசம் |
| 1739 | 4 | 6 | க விசுவலிங்கம் ஆனைக்கோட்டை ஒற்றைக் கல்லில்லாத பொன் கல் வளைக் குச்சி இரண்டு |
| 1793 | 19 | 50 | பொ இராமநாதர் பிரப்பங்குள ரோட் பொன் வெளி முனைகாப்பு 2 |
| | | | 7ம் மாசம் |
| 1858 | 8 | 7 | க சின்னையா ஆனைக்கோட்டை பொன் தாலி ஒன்று |
| 1934 | 27 | 27 | க அமிர்தலிங்கம் ஓட்டுமடம் இ பொன் ஏடன் இ பொன் தலைசூரான் சோடி ஒன்று |
| 1939 | 27 | 16 | க பொன்ன ஆனைக்கோட்டை ஒற்றைத்திருகும் ஒரு கல்லுமில்லாத பொன் காதோலை இரண்டு |
| | | | 8ம் மாசம் |
| 1956 | 1 | 7 | அ காசிமுகிதீன் சோனகதெரு இ பொன் பூசாக்கிரம் ஒன்று இ பொன்மணி காறு இ பொன் திருக்கண்டமாலை பன்னிரண்டு |
| 1993 | 8 | 18 | செ மீரா மெய்தீன் சோனகதெரு இ கல் பொன் மோதிரம் ஒன்று பொன் காதக்கம்பி இரண்டு இ பொன் அலுக்கோர்த்த வட்டு |

விற்பனவு 1936ம் ஆண்டு செப்டெம்பர்மீ 7ந் திகதி (7-9 36) திங்கட்கிழமை 9 மணி தொடக்கம் மேற்பட்ட நகைகள் பிறர்கைகளாக மீதுசி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்,
லெக்தின்மேன்கர்

(Mis. 115., 20 & 24-8 36)

## 18வது கலியாணம்.

ருஷியாவில் இருபத்திரண்டு வயதுள்ள மார்க்கரா லர்க்கோவா என்ற அழகிய சுந்தரி இதுவரை பதினேழு கணவர்களை மணந்தாய்விட்டது. அவள் பதினெட்டாவது கணவனைக் கலியாணஞ் செய்ய விரும்பினள். அவ்வாறு செய்தல் கூடாதென்று அதிகாரிகள் தடுத்து விட்டார்கள். சட்டமாணவியான இந்த மாது தேகம் அடைந்து ருஷியாவின் சர்வாதிகாரியான ஸ்டாலினுக்கு விண்ணப்பஞ் செய்தாள். எனது கலியாணம் எனது சொந்த விஷயம். அதில் யாரும் தலையிடலாகாது, எத்தனை கணவர்களை வேண்டுமானாலும் நான் கலியாணம் செய்து கொள்ள உரிமையுண்டு. எந்த அதிகாரியும் எனது உரிமையில் தலையிட வேண்டியதில்லையென்று அவள் எழுதினள். ஆனால் கலியாணம் என்பது விளையாட்டல்ல. ருஷியாவில் நல்ல குடும்பங்களை ஏற்படுத்தற்காகக் கலியாணம் அவசியம். எனவே, இந்த விஷயத்தில் நான் தலையிட முடியாதென்று சர்வாதிகாரி ஸ்டாலின் சொல்லிவிட்டார். 17 வயதில் அவள் கலியாணம் செய்யத் தொடங்கினளாம். அவள் முதலில் கலியாணம் செய்த மாணவக் கணவனை நாலுவாரம் கூடி வாழ்ந்த பின்னர் விவாகரத்துச் செய்துவிட்டாள். அதற்குப் பின் ஐந்து வருஷங்களுக்குள் பதினறு புருஷர்களைக் கலியாணம் செய்து அவர்களை ஒவ்வொருவராக விட்டுவிட்டாளாம். ஒரு கணவனுடனும் அவள் ஒரு மாதத்திற்கு மேல் கூடி வாழ்ந்ததில்லையாம்.

# ஸ்பானிய உள்நாட்டுக்கலகம்

## 2000 பேர் வரையிற் கொலைசெய்யப்பட்டனர்

### பயங்கரமான செயல்கள்

16 – 8 – 36

ஸ்பானிய உள்நாட்டுக் கலகம் வரவரப் பயங்கரமானதும் ஆயிரக் கணக்கான உயிர்ச் சேதத்தோடு கூடியதுமாக மாறி விட்டது! கலகக்காரரே வெற்றியடைந்து வருகிறார்கள்; படாஜோஸ் என்னும் பட்டினத்தைக் கலகக்காரர் நாசமாக்கி விட்டனர். அந்தப் பட்டினத்தில் எங்கே பார்த்தாலும் அழிவு சிதைவுகளும் இரத்தப் பெருக்கும் பிணமலைகளுமே காணக் கிடக்கின்றன என்று அங்குச் சென்ற போத்துக்கேய பத்திரிகை நிருபரொருவர் தெரிவிக்கின்றார். கலகக்காரர் அந்தப் பட்டினத்திலுள்ளோரில் 200 பேரைச் சுட்டும் தூக்கிட்டும் கொலை செய்து விட்டனர்.

ஸர்ன் ஸ்பஸ்ரியான் என்னும் மலைப்பட்டினத்திற்குக் கலகக்காரர் படையெடுத்துச் சென்று அதனைத் தாக்குகின்றனர். அரசினர் பகுதியினருக்கு இப் பட்டினமே பிரதான அரணாகவுள்ளது. குறித்த பட்டினத்தோடு கலகக்காரரிடம் சரண புகுவதைக் காட்டிலும் பட்டினத்தை அழித்துவிட்டுத் தாம் மாண்டு போவதுதானும் அரசினர் பகுதியாரின் நோக்கம்.


## இலங்கையில் நெய்யப்பெறும் சீலைகளையே வாங்குங்கள்!

### நமது நாட்டுக் கைத்தொழிலை ஆதரியுங்கள்!!

#### வேட்டிகளும் சால்வைகளும்

**நூலிற் சலவை செய்யப்பெற்ற வேட்டிகள்**

பட்டுப்பூப் போட்டதும், பச்சை, சிவப்பு, ஹெலிக்கோ ஆதியாம் நிறங்களிற் கரை வேலை யுடையதும் ஆகும்.

50,, × 4யார் தனித்தனி ரூ1-50
45,, × 3½ ,, ,, ,, 1-40
50,, × 4 ,, ,, ,, 1-45

மேற்படி வேட்டிகளுக்குப் பொருந்தமான சால்வைகள்

36, × 2½யார் தனித்தனி ச 80
38,, × 2½ ,, ,, ,, 75
40,, × 2½ ,, ,, ,, 80

மெல்லிய பூக்கரையுள்ளவை

50,, × 4யார் தனித்தனி ரூ1-55
அவற்றிற்கேற்ற சால்வைகள்
35,, × 2½யார் தனித்தனிசதம்80

பார்மாஸ் வேட்டிகள்
தூய வெள்ளை நிறம்

50,, × 4யார்தனித்தனி ரூ 1-50
அவற்றிற்கேற்ற சால்வைகள்
35,, × 2½யார் சதம் 75.

**நூலிற் சலவைசெய்யப்பெற்ற வேட்டிகள்**

பூக்கரைகளை யுடையவை
47 ,, × 4 யார் தனித்தனி ரூ 1-50
வரிபோன்ற கரையை உடையவை
52 ,, × 4 யார் தனித்தனி ரூ 1 45
அழகான ஒற்றைவரிக் கரைகளை யுடையவை
48 ,, × 4 யார் தனித்தனி ரூ 1-25
மெல்லிய வரிக் கரையை யுடையவை
46 ,, × 4 யார் தனித்தனி ரூ 1-20
48 ,, × 3½யார் தனித்தனி ரூ 1-15
அவற்றிற்குத் தகுந்த சால்வைகள்
40 ,, × 2½ யார் தனித்தனி ச 75
38 ,, × 2½ யார் தனித்தனி ச 65

**கிரே வேட்டிகள்**

அழகான கரைகளையுடையவை
44 ,, × 4யார் தனித்தனி ரூ 1-25
41 ,, × 4யார் தனித்தனி ரூ 1-30
அவற்றிற்கேற்ற சால்வைகள்
38 ,, × 2½ யார் தனித்தனி ச 75

**நூலிற் சலவை செய்த வேட்டிகள்**

பச்சை, சிவப்பு, ஹெலிக்கோ நிறங்களிற் பட்டுப்பூக் கரைகளை யுடையவை
48 ,, × 4 யார் தனித்தனி ரூ 1-50
52 ,, × 3½யார் தனித்தனி ரூ 1-50

கனவான்களே!

நீங்கள் எவ்வளவு தேடினாலும் எங்கள் ட்ரில் துணிகளைப்போலச்சிறந்த துணிகளைப் பெற முடியாது. நூலிற் சலவைசெய்யப் பெற்ற எமது ட்ரில் நல்ல பாவிப்புக்கு நின்றுபிடிக்கக்கூடியவை.
28 ,, அகலம் சுப்பர் பிளீச் ட்ரில் யார் ஒன்றுக்கு 45 சதம்
28 ,, அகலம் பிளீச் பண்ணுத ட்ரில் யார் ஒன்றுக்கு 35 சதம்

**லங்கா லாங்குளோத்ஸ் இப்போது இல்லை**

இப்போது சகல பாவிப்புக்கும் சகலருக்கும் தகுந்த ஒரு புதிய லாங்குளோத்ஸ் எம்மிடம் இருக்கின்றன.

**பப்புலர் லாங்குளோத்ஸ்**

30 ,, அகலம் யார் ஒன்றுக்கு சதம் 20 அல்லது 20 யார் கொண்ட ஒரு துண்டுக்கு ரூபா 3-40

**ஸ்டாண்டர்ட்லாங்குளோத்ஸ்**

பொதுப்பாவிப்புக்குரிய மிகச் சிறந்த லாங்குளோதன்
32 ,, அகலம் யார் ஒன்றுக்கு சதம் 23 அல்லது 20யார் உள்ள துண்டுக்கு ரூ 4.
42 ,, அகலம் யார் ஒன்றுக்கு 32 சதம் அல்லது 20 யார் கொண்ட ஒரு துண்டுக்கு ரூபா 5 35

**லங்கா லாங்குளோத்ஸ்**

பெண்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் உள்ளுடையாகப் பாவிக்கக்கூடிய மேன்மையான மிக நெருக்கமாக செய்யப்பெற்ற சிறுகன்
42 அகலம் யார் ஒன்றுக்குச் சதம் 35
20 யாருள்ள ஒரு துண்டுக்கு ரூபா 6-50

**சுப்பர் பைன் லாங்குளோத்ஸ்**

வீட்டுப்பாவிப்புக்கு மிகச் சிறந்தவை
42 ,, அகலம் யார் ஒன்றுக்கு 45 சதம் அல்லது 20 யார் கொண்ட ஒரு துண்டுக்கு ரூபா 8-50

**சுப்பர் லாங் குலோத்ஸ்**

சல்லடைக்கு மிகச் சிறந்த சீலை வேண்டும்போது இதே வாய்த்ததாகும்.
42 ,, அகலம் யார் ஒன்றுக்கு 55சதம் அல்லது 20யார்கொண்ட ஒரு துண்டுக்கு ரூ9-75

**வெள்ளை மல்**

54 ,, அகலம் யார் ஒன்றுக்கு சதம் 45 அல்லது20யார் கொண்ட ஒரு துண்டுக்குரூ 7
48 ,, அகலம் யார் ஒன்றுக்கு சதம் 30 அல்லது 20யார்கொண்ட ஒருதுண்டுக்குரூ5,

சில்லறை வியாபாரக்கடை,
133 மெயின்ஸ்ட்ரீட், புறக்கோட்டை, கொழும்பு, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தி சிலோன் ஸ்பின்னிங் அன் வீவிங் கம்பெனி லிமிட்டேட்டின்
முதலாவது மோட்கேஜ டிபெஞ்சர்கள் வைத்திருப்போருக்கு டிரஸ்டிகள்

(Mis 104 10-8-36 to 28-9-36



## கொயிலொன் வங்கி லிமிட்டெட்

1919-ம் ஆண்டு திர்பான் கூரில் பதிவு செய்யப்பட்டது.
இலங்கையிலுள்ள கிளை ஸ்தாபனங்கள்:— கண்டி, யாழ்ப்பாணம்
பின்வரும் வட்டி விகிதப்படி பவுண் நகைகள் அடைவு பிடிக்கப்படும்.

20 ரூ முதல் 1000 ரூ வரைக்கு 100க்கு 9வீத வட்டி
1000 ரூ ,, 2000 ரூ ,, 8 ,,
2000 ரூ ,, 5000 ரூ ,, 7 ,,
5000 ரூபாய்க்கு மேற்பட்டதொகைக்கு 100—6 வீதவட்டி

கோயிலன் பாங்குக்காக
யாழ்ப்பாண ஏஜெண்ட்.

(Q. 101. 6-8 to 5-11-36.)


## அடைவு நகை விற்பனவு விளம்பரம்

1893ம் ஆண்டின் 8ம் இலக்கச் சட்டசபைச் சட்டத்தின்படி அனுமதி பெற்று அடைவு பிடிக்கும் வண்மேற்கு கொட்டடி M. C. R. K. கந்தையா பழைய விலாசம் R. கந்தையா & N. செல்லத்துரை) என்பவரிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:

1935ம் ஆ 2ம் மீ

| நம். | தி. | ரூ. | பெயர் ஊர் நகைவிபரம் |
|---|---|---|---|
| 6196 | 22 | 81 | M தாமோதரம்பிள்ளை பறங்கிதெரு வயிரத் தொங்கட்டான் 1 |
| | | | 3ம் மீ |
| 6243 | 2 | 11 | க தம்பையா வேலணை தச்சர் கூடு 1 |
| 6264 | 3 | 7 | ச சவுந்தரம் கொட்டடி ஒருசோடி இ மி ஓலை |
| 6300 | 6 | 16 | மோ அன்னமுத்து நாவாந்துறை சதுரக் கடுக்கன் சோடி 1 |
| 6341 | 13 | 12 | அ மடைத்தின் மண்டைதீவு ஒருசோடி இ மி ஓலை |
| 6368 | 16 | 17 | வே கலாத்தினம் மண்டைதீவு ஒரு பென்டன் |
| 6372 | 16 | 22 | க சபாபதி வேலணை 2 குண்டு கூவத்த அரைப்பவுண் காதப்பூ |
| 6394 | 20 | 150 | மு சதாசிவம் மூளாய் சங்கிலி 2 |
| 6403 | 21 | 6 | வே கனகரத்தினம் பெரியகடை ஒருசோடி வெ ஓலை |
| 6410 | 21 | 9 | வ சின்னத்தம்பி கரையூர் ஒரு சோடி இ மி ஓலை, ஒருசோடி குச்சி |
| 6436 | 26 | 22 | செ கந்ததாஸ் அப்துல்காதர் சோனகதெரு மணிக்கோர்வை 1, அட்டிகை குத்து 5 |
| 6450 | 28 | 12 | ச கந்தையா நல்லூர் கல் கொண்டைக்கூர் 1 |
| | | | 4ம் மீ |
| 6505 | 3 | 10 | செ பொன்னம்பலம் வெள்ளாந்தெரு குண்டுவைத்த அரைப்பவுண் 1 |
| 6752 | 20 | 65 | மு ஆறுமுகம் நவாலி மு கோடி ஒன்று |
| 6786 | 25 | 9 | அ விசுவநாதர் புத்தூர் ஒருசோடி சதுரக்கடுக்கன் |
| 6605 | 27 | 35 | மு சுலைதான் அப்துல்காதர் சோனகதெரு ஒற்றைப் பட்டணம்காப்பு |
| 6607 | 28 | 11 | வ செல்லையா கொட்டடி கூடு 1 |
| 6608 | 28 | 15 | ஆ கந்தையா புங்குடுதீவு கூடு 1 |
| 6617 | 29 | 90 | அ பிரகாசம் பலாலி மு கோடி 1 |
| 6628 | 30 | 7 | க சின்னத்தம்பி நவாலி சதுரக்கடுக்கன் சோடி 1 |
| | | | 5ம் மீ |
| 6678 | 8 | 35 | வ தம்பிமுத்து கொட்டடி ஒரு சோடி சிறு காப்பு |
| 6675 | 8 | 20 | செ பொன்னம்பலம் வெள்ளாந்தெரு வயிரத் தொங்கட்டான் 1 |
| 6685 | 9 | 150 | மு தம்பிராசா புங்குடுதீவு செட்டிக்காப்பு சோடி 1 |
| 6837 | 17 | 16 | மீ முகிதீன்தம்பி சோனகதெரு சிறு காப்பு சோடி 1 |
| | | | 6ம் மீ |
| 6976 | 5 | 78 | மா தம்பையா தொல்புரம் 1 பதக்கம் |
| 7144 | 27 | 90 | மு குமாரசாமி கொட்டடி செட்டிக்காப்பு சோடி 1 |
| 7155 | 28 | 8 | த மயில்வாகனம் பெரியகடை செடியார் ஓலை சோடி 1 |
| 7166 | 29 | 24 | மோ அன்னமுத்து காவாந்துறை தாலி 1, காப்பு சோடி 1 |
| | | | 1934ம் ஆ 12ம்மீ |
| 5606 | 20 | 12 | மோ சின்னத்தம்பி நவாலி சதுரக்கடுக்கன் சோடி 1 |
| | | | 7ம் மீ |
| 5573 | 22 | 9 | இ டைபதி கொட்டடி மோதிரம் 1 |
| | | | 8ம் மீ |
| 4778 | 28 | 5 | க இ ரசம்மா கொட்டடி காதப்பு சோடி 1 |
| | | | 12ம் மீ |
| 6581 | 17 | 8 | மு மாணிக்கம் அல்லைப்பிட்டி காப்பு சோடி 1 |
| | | | 1935ம் ஆ 12ம் மீ |
| 6035 | 7 | 145 | கா சிவசுதினம் வெள்ளாந்தெரு காப்பு சோடி 1 |
| | | | 1934ம் ஆண்டு 11ம் மீ |
| 5409 | 30 | 7 | மு ஆசீர்வாதம் தாராக்குளம் பதக்கம் 1 |

விற்பனவு: தாது வருஷம் ஆவணி மாதம் 21ந் திகதிநாயிற்றுக்கிழமை (6-9-36) சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்பட்டநகைகள் பிறர்கைகளாக மீதுசி மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

சி. ஐயம்பிள்ளை உடையார்
வொந்தின்மேன்கர்,

(Mis 144. 20 & 24-8-36)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்

1893 ம் ஆண்டின் 8 ம் இலக்கச் சட்டவச்சட்டத்தின்படி லைசென்ஸ்பெற்ற அடைவு பிடிக்கும் யாழ்ப்பாணம் அரு. ப. சே. கடையில் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்பட வேண்டிய நகைகளின் விபரம்:

இல. திகதி, ரூபாய், ஊர் பெயர் நகைவிபரம்

1935 ம் ஆ. மார்ச்சு மீ

6024 5 20 தொல்புரம் நாராயணர் ஆறுமுகம் பொன் இறு மினுக்காப்பு சோடி 1
6145 21 11 கொக்குவில் கிழக்கு அம்பலவாணர் சுந்தரம் பொன் கெளித்த இமிகல் புரோச் 1

ஏப்பிரல் மீ
6381 17 10 உடுவில் கந்தையா பெண் சின்னத்தங்கச்சி பொன் குப்பிக்கடுக்கன் சோடி 1
6451 25 45 இணுவில் மரியாம்பிள்ளை தம்பு பொன் இமி முகப்புச் சுரை திருகு இல்லாத சைச் சங்கிலி 1 இமி கல் இல முகதுடிம்பியில்லாத பதக்கம் 1

மே மீ
6563 10 55 இணுவில் வைத்தியம்பிள்ளை குசைப்பிள்ளை பொன் இமி கல் இல்லாத குரு சொல்ற சோர்த்த சங்கிலி 1
6584 12 110 வண்மேற்கு அம்பலவாணர் வேலுப்பிள்ளை பொன் பழுது சுரைதிருகில்லாத செட்டிப்பூரான் சரடு 1
6598 13 10 கோண்டாவில் கந்தையா நமசிவாயம் பொன் இமிகல் தோடுசோடி 1
6690 22 27 கொக்குவில் கந்தர் பொன்னம்பலம் பொன் இளைவர் மோதிரம் 1 இமிகல் வைத்தோர் 1

ஜூன் மீ
6800 4 175 அளவெட்டி சண்முகம் இருளப்பபிள்ளை பொன் சுரையாணியில்லாத முறுக்குத்திர தாலிக்கொடி 1
6816 5 18 வண்கிழக்கு ஆறுமுகம் இராசேந்திரம் பொன் கெளித்த இமிகல் முத்துட புரோச் 1
6908 14 75 அளவெட்டி அ. வெண்டரசர் செல்லப்பா பொன் சுரையாணி திருகு இமி கல் இல முத்து இல்லாத முறிச்சக்குத்தி அட்டியல் 1 கல் இல்லாத மோதிரம் 1
6940 18 51 வட்டுக்கோட்டை சிவசுப்பிரமணியம் கந்தசாமி பொன் அரக்குப்போட்ட பட்டைக்காப்பு 1
7020 26 155 ஆனைப்பந்திபடி செ. லம் துரையப்பா பொன் இமிகல் செட்டிப்பூரான் அட்டியல் 1

ஜூலை மீ
7077 1 7-50 கச்சுருகிட்டி ஆறுமுகம் கந்தையா பொன் பழுது இளைவர் மோதிரம் 1
7084 2 25 கீர்வேலி வீரகத்தி வல்லிபுரம் மட்டப்பொன் பழுதவலயம் அஞ்சுன்ன 105 ஒட்டுக்கொடி 1
7094 3 12-50 அத்தியடி மாணிக்கம் பொன்னம்பலம் பொன்சுரை ஆணி இமிகல் முகது இல்லாத பதக்கம் 1
7158 9 10 வண்மேற்கு முருகேச செல்லத்துரை பொன் பழுது இமி ஒன்றில் ஒருகல் இல்லாத தோடு சோடி 1
7229 13 7 கோண்டாவில் சுப்பையா செல்லத்துரை பொன் இமில் மோதிரம் 1
7318 20 17 உடுவில் சின்னப்பு பொன்னுத்துரை பொன் இமிகல் தோடுசோடி 1
7343 22 7 இணுவில் அம்பலவாணர் கதிரித்தம்பி பொன் கல் இல்லாத காதவைத்த அரைப்பவுண் 1
7376 26 13 வண்கிழக்கு பழனியப்ப செட்டியார் பொன்னுச்சாமிச் செட்டியார் பொன் இமிகல் காதோலை சோடி 1
7379 27 81 கோண்டாவில் வடக்கு அப்பாக்குட்டி முத்துத்தம்பி பொன் கெளித்த சுரை திருகில்லாத முறுச்சக்குத்திக்காடு 1

விற்பனவு தாதுவரு ஆவணி மீ 16 ம் திகதிக்குச்சரியான 31-8-36 திங்கட்கிழமை காலை 10 மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறீக்கலாக மிகுதி மேற்படியாரிடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சி. ஐயம்பிள்ளை உடையார்
வெந்தீஸ் மேஸ்தர்

Mis 111 13 & 20-8 36

---

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக, ரோகிகளுக்குச் செய்து கொடுத்துப் வியாதிகளைக்குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை யான் விளம்பரத்தில்உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆணுரோகிகள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப் பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பூதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுதலிலி பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதப் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அரச பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அபகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேகபுஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும் ஸ்திரீகள் இந்தலேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவஅறையில் உண்டாகும் நோய்கள்தீர்ந்துதேகபுஷ்டியும்பலமும் பெறுவார்கள். பால்விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0. அரை ருத்தலுக்கு ரூபா பத்து. கால் ருத்தலுச்கு ரூபா ரு. தபாற்செலவு பிரத்தியேகம்,

சிங்கப்பூர்பினுங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததனுல் முன் மனிஆடர் அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்று,
மட்டக்களப்பு.

Y46 1-1-36 to 31-12-36) ஜேவன்.

---

## நேத்திரானந்த தைலம் / Nethrananda Thailaya

**Ceylon's Premier Curative Medicine Oil.**

# நேத்திரானந்த தைலம்.

**இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவேமுதல்தரம்.**

6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா **2-50.**
தபாற்கூலி **45** சதம்.



இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திறகுள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகுஞ் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதைபடர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை நரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி தலைமயிரை நீளமாய் வளரச்செய்து பளபளப்பையும் கொடுக்கிறது இதை உபயோகித்தால் கண்ணடி போடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள தனவான்களாகியபெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள், வெளிகளிருக்கும் ஏனைய போலிதைலங்களைப்போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்துகொள்வதும், மாதர் அதிகமாக விரும்புவதும் 35 வருஷங்களாக யாவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்

**இந்த நேத்திரானந்த தைலமே.**

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்ட பெயர் உண்டு என்று வர்த்தமானிகிற ஒவ்வொரு சிறுபிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலை மயக்கம், கண் எரிவு, தலைவலி, இள நரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதம் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினுல் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்தில் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப்பட்டுள்ளது.

தலைமை ஸ்தாபனம்:—
வைத்தியசேகர முதலியார்,
டப்ளியு. டானியல் பெர்னுண்டோ,
ஸ்ரீவேத வளவும், பாணந்துறை.

கிளை ஸ்தானம்:—
பௌத்தமந்திர வைத்தியசாலை.
நோரிஸ்ரோட், கொழும்பு—இலங்கை
காவலில் ஹோட்டல், கண்டி.

தந்தி விலாசம்:—வேத முதலியார் பாணந்துறை.

(H 332. 20-3-36 to 19-9-36)

---

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி,

( வரையுளது )

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**
ஒன்று 25சதமாக 80 மாதங்கள் செலுத்திரூபா
25ம் ஆதாயமும்பெறலாம்
தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றன.
வேண்டிய இடங்களில் கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.
தேசிய கருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெற முடியும். ஆதலால்,
முதலை வளர்த்து வேலை யளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
நோக்கங்கொண்ட இந்நிதியை ஆதரியுங்கள்!
இலகுவான முறையில் இறக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம் பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!!
கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருளும்
சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளுவோம்.

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(Y. 189. 1-11-35 to 31-10 36.) வி.

---

## கண்ணே பிரதானம்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கில் பிறவுண்றோட் (நரியன் குண்டு) ரத்தினவாசத்தில் அமைக்கப்பெற்ற அமிர்தானந்த வைத்தியசாலையில் இப்பொழுது நேத்திரத்திற்குரிய சிகிச்சைக்கு வேண்டப்படும் ஔஷதங்கள் கருவிகளுஞ் சேர்க்கப்பட்டிருத்தலால் வேண்டியவர்கள் காலை 7 மணி முதல் 10 மணிவரை வசதியாக ஆலோசனை செய்து சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் மற்றைய நோய்களுக்கு வேண்டிய சிகிச்சை முன்போல் நடைபெறும்.

வைத்தியசாலை சொந்தக்காரர்
த. இராமலிங்கம் வைத்தியர்

Address:—
Manager
Amirdananda Vaidyasalai
"Ratna Vasa" Brown Road
Vannarponnai
Jaffna (Ceylon)

Y. 27-5-36 to 30-4-37. (வி)

---

## ஆரோக்கிய லேகியம்

சிறந்த மலசுத்தி ஔஷதம்

மலபந்தமே உங்களின் ஆரோக்கியத்துக்கு இடையூறாகும். ஆரோக்கிய லேகியம் சாப்பிடுவதால் தினசரி கிரமமாய மலங்கழியும்; சோம்பல் நீங்கும்; தினசரி அலுவல்களுக்கு உற்சாகம் உண்டாகும்.

இன்னும் நித்திரை ஸ்கலிதம், நீருடன் ஸ்கலிதமாதல், உடம்பு இளைத்து வருதல், கை கால்சதி, குடைச்சல், நீங்கும். பத்தியமில்லை.

20 ரூபா எடையுள்ள டின் விலை ரூ. 2-00 தபால்செலவு சதம் 75.

**நீரழிவுக்கு.**

அப்ரேக் செந்தூரம் கைகண்ட மருந்து.

பரீக்ஷை:—ஒரு மண் கலசத்தில் வழி தளும்பும்படியான நிறைய தண்ணீர்விட்டுப் போட்டு அதில் ஜலம் விட்டு ஒழுகும்போது நமது அப்ரேக் செந்தூரம் ஒரு விட்டி எடுத்துப் போட்டால் ஒழுகும் ஜலம் உடனே அடைபட்டுவிடும். அதேபோல் நீரழிவில் அளவுமீறி ஓடிய நீரைக் குறைத்து நீரில் சர்க்கரை இருப்பது, தாகம் வரட்சி இவைகளைக் குணமாக்கும்.

20 நாள் மருந்து விலை ரூபா 12-50 சதம்.
ஸ்பெஷல் அநுபானம் சதாவரி லேகியம் ரூபா 4-50.

**தங்கபஸ்பம்.**

தாதுபுஷ்டிக்கு ஓர் வரப்பிரசாதம்.

மெலிந்த தேகத்தைப் போஷித்து சரீரத்தில் புதியரத்தத்தை ஊறச்செய்து அளவற்ற பலம், ஆண்மை வீரிய விர்த்தி உண்டாக்கும். பத்தியமில்லை. (விபரமான கேட்லாக் இலவசம்.)

30 வேளை தங்கபஸ்பம் ரூபா 10. அநுபானம் லேகியம் ரூபா 2-50.
வெளிநாட்டு நண்பர்கள் ஆர்டருடன் முன்பணமனுப்ப வேண்டும்.
தண்டபாணி வைத்தியசாலை, பழனி.

Q 19. 27-4 to 26 10-36 வி (Palni S. I.)

---

## N.வைத்திலிங்கம் & கம்பெனி

பெரியகடைத்தெரு, யாழ்ப்பணம்

கட்டிடங்களுக்குவேண்டிய முதல்தரமானசாமான்கள்.
ஜெர்மனி, ஜப்பான், டச்சு
முதலியவிடங்களில்செய்யப்பட்ட உத்தரவாதமுள்ள
சிமெந்துவகைகள், இரும்புச் சாமான்கள்
வர்ணங்கள், வார்ணிஸ், கொழுக்கி ஓடுகள்
இன்னும் கட்டிடத்திற்குரிய சகல சாமான்களும்
எப்பொழுதும் விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.
கட்டிட வேலைகளைப்பற்றி எங்களிடம் யோசித்தால்
சகாயமும் சௌகரியமும் கிடைக்கும்.

HEAD OFFICE:
38, 3rd Cross Street,
Colombo. Telephone No. 30.

(Y. 47. 8-2-36—7-2-37) வி

---

## விளம்பர விகிதம்.

வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டில் இந்துசாதனப் பிரசுரங்களில் விளம்பரஞ் செய்க.

| | | | |
|---|---|---|---|
| 1 | பந்தி (கலம்) | ரூபா | 10-00 |
| ½ | ,, ,, | ,, | 5-50 |
| ¼ | ,, ,, | ,, | 4-00 |
| 1 | அங்குலம் | ,, | 1-00 |

அடுத்த பிரசுரங்களிற் பாதி விகிதம்.

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்துமூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

மானேஜர்
சைவப்பிரகாசயந்திரசாலை

---

படுபயன் வெஃகிப் பழிப்படுவசெய்யார்
நடுவன்மை நாணுபவர்.

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம்வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

---

Printed and Published by S. ADCHALINGAM, residing at Vannarponnai West Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Thursday, August 20th 1936.